# இலக்கு

வாராந்த மின்னிதழ்

15.12.2019

இதழ் 56

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA • ilakku2009@gmail.com

www.ilakku.org www.facebook.com/Illakku-Web https://twitter.com/Ilakku1




## தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் சிந்தனைகள் இன்றைய காலத்தின் தேவையாகிறது

– ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன் –

பகுதி 2

## பாலஸ்தீன தேசிய போராட்டம்

ந. மாலதி

## கோத்தபயா – மோடி சந்திப்பின் விளைவே

இலங்கைத் தமிழர் மீதான குடியுரிமை சட்டத் திருத்தம் – கல்யாணி



பகுதி 2

## இந்தியாவிற்கு எதிராக இயங்க வேண்டும் என்று எப்போதுமே விடுதலைப்புலிகள் கூறியது கிடையாது

## சிங்களக் குடியேற்றங்களால் சின்னாபின்னமாகும் வவுனியா வடக்கு

– கோ.ரூபகாந்–



## ஆங்கிலேயர்கள் தமிழ் மக்களுக்கு செய்த தவறுகளை ஏற்பதுடன் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்றோம்

பிரித்தானியா தொழிலாளர் கட்சி

# இனவாதி கமால் குணரெட்னாவுக்கு எதிராக

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம்.



அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்ட பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்ன, படையினர் மத்தியில் இனவாதம் மற்றும் மதவா தத்தை சித்தரிக்கும் வகையில் உரையாற்றியிருந்தார்.

அனைத்து மக்களுக்கும் அவரவர் மதங்களை பின்பற்ற உரிமை உள்ளது. ஆனால் இது பௌத்த நாடு என்பதை யாவரும் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

இக் கருத்து தமிழ் மக்கள் மத்தியில் அச்ச உணர்வைத் தோற்றுவித்திருக்கின்றது. கடந்த காலங்களில் நாட்டில் அரங்கேறிய கொடிய யுத்தத்தில் தமது உறவுகள், உடைமைகள் அனைத்தையும் இழந்து நிர்க்கதியான நிலையில் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் கடந்த ஆட்சி காலத்தில் ஓரளவு நெருக்கடிகள் தளர்த்தப்பட்டு வாழ்ந்து வந்தனர்.

இந் நிலையில் போர்க்குற்றவாளியாகக் கருதப்படும் ஒரு நபர் தற்போது நாட்டில் ஜனாதிபதியாக வலம் வருகின்றார். அவரைச் சார்ந்த அரசாங்கம் வடக்கு கிழக்கு தமிழ் மக்களை மீண்டும் ஒரு ஒடுக்கு முறைக்குள் கொண்டுவரத் திட்டம் தீட்டுவது போல, அரச பிரதிநிதிகளின் மேடைப் பேச்சுக்கள் அரங்கேறுவதால் தமிழ் மக்கள் மீண்டும் ஒரு அச்ச நிலையில் வாழ வேண்டியுள்ளது.

இதேவேளை பாதுகாப்புச் செயலாளரின் யாழ். வருகையை எதிர்த்து வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம் ஒன்றினையும் நடாத்தியிருந்தனர்.

குறித்த போராட்டத்தில், ஈடுபட்டவர்கள் போர்குற்றவாளி கமால் குணரட்ன பாதுகாப்பு செயலாளராக மீண்டும் அதிகாரத்துக்கு வந்துள்ளார். இது அவர்களின் தமிழ் இனப் படுகொலையை தொடர்ந்து ஊக்குவிக்கும் என்ற வாசகம் பொறிக்கபட்ட பதாகையை ஏந்தியிருந்ததுடன், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்க நாட்டினது கொடிகளையும் கையில் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது.



இதனிடையே, அண்மைய காலங்களில் நடைபெற்று வரும் சம்பவங்கள் ஊடாக வலிந்து காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளை தேடும் நாமும், எமக்கு உறுதுணையாக இருப்பவர்களும் காணாமலாக்கப்படுவோமோ என்கின்ற அச்ச நிலையினை தோற்றுவித்துள்ளதாக வடக்கு, கிழக்கு இணைந்த வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச மனித உரிமைகள் நாளான டிசம்பர் 10ஆம் நாள் முல்லைத்தீவில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மகஜரில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவுடன் அணிசேரா நாடுகளில் இருந்து

## விலகுகின்றதா இந்தியா

இந்தியா தனது அணிசேரா வெளியுறவுக் கொள்கைகளில் இருந்து அமெரிக்காவின் சீரமைக்கப்பட்ட கொள்கையுடன் சேர்ந்துள்ளதா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. இந்தியாவின் இந்தக் கொள்கை மாற்றம் இலங்கை உட்பட பல தென்னாசிய நாடுகளில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் எனக் கருதப்ப டுகின்றது.



இந்தியாவின் அணிசேராக் கொள்கையை மேற்கத்திய நாடுகளும், யப்பானும் முன்னர் விரும்பவில்லை. ஆனால் சோவியத் ஒன்றியத்தின் சரிவுடன் சோவியத்துக்கு ஆதரவான இந்தியாவின் கொள்கைகளில் மாற்றம் தென்பட்டது. அணுசக்தி பரவல் தடை உடன்பாட்டுக்கு இந்தியா உடன்படாததால் அமெரிக்கா முன்னர் இந்தியாவுக்கான உதவியை நிறுத்தியிருந்தது.

ஆனால் சீனாவின் வளர்ச்சியை தடுத்து நிறுத்துவதற்கு அமெரிக்காவுக்கு இந்தியாவின் உதவி தேவைப்பட்டது. சீனாவுக்கு இணையான பொருளாதார அளவைக் கொண்ட நாடாக இந்தியா இருக்கின்றது.

அமெரிக்காவுக்கு நெருக்கமாக இந்தியா நகர்ந்தாலும், இந்தியா தனது சுயாதீனமாக முடிவெடுக்கும் தகுதியை இழக்காது என்ற உறுதி மொழிகளை அமெரிக்கா இந்தியாவுக்கு வழங்கியது. இந்தோ – அமெரிக்கா உறவு தற்போது பாதுகாப்பு, பொருளாதார உடன்பாடுகளில் பிணைந்துள்ளது.

இந்த நிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அணிசேரா நாடுகளின் மாநாட்டில் அதிக அக்கறைகளை தற்போது காண்பிப்பதில்லை.

2016 ஆம் ஆண்டு வெனிசுலாவில் இடம் பெற்ற மாநாட்டை புறக்கணித்த மோடி இந்த வருடம் ஆர்ஜபைஜானில் நடைபெற்ற மாநாட்டையும் புறக்கணித்துள்ளார். அதாவது ஏழை நாடுகளில் உறுப்பினராக இருப்பதை இந்தியா விரும்பவில்லை. இந்த மாநாடுகளில் தாம் கலந்து கொண்டால் இந்திய–அமெரிக்க உறவுகள் பாதிக்கப்படலாம் என மோடி கருதியிருக்கலாம்.


அணிசேரா நாடுகளின் முக்கிய கூட்டத்தை தவிர்த்த மோடி, குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த மேற்குல இராஜதந்திரிகளின் கூட்டங்களில் கலந்து கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# சிறுமி மீது வன்முறைப் பிரயோகம்

## குற்றவாளிகளின் சார்பாக வாதாடும் தமிழ் அரசியல்வாதி

நான்காம் தரத்தில் கல்வி பயிலும் 9 வயதுடைய மாணவியை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட வல்வெட்டித்துறை அம்மன் கோயிலில் வேலை செய்யும் 71 வயதான ஆலய மடப்பள்ளி அர்ச்சகர் மற்றும் சிறுமியின் சித்தப்பா உள்ளிட்ட இருவரது விளக்க மறியலையும் வரும் 20ஆம் திகதிவரை நீடித்து பருத்தித் துறை நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது.

சிறுமி பொலிசாரின் முன்னிலையில் ஆஜரான பொழுது, அர்ச்சகர் தன்னை ஆலய மடப்பள்ளியில் வைத்து துன்புறுத்தலுக்குள்ளாக்கியதாகவும் தனக்கு அதிகளவான பணத்தை அவர் தந்ததாகவும் விசாரணையில் குறிப்பிட்டிருந்தார். மேலும் தனது சித்தப்பா ஒருவரும் இவ்வாறு தன்னை துன்புறுத்துவதாகவும் சிறுமி



தெரிவித்திருந்தார். அத்துடன் அர்ச்சகரால் வழங்கப்பட்ட ஒருதொகை பணத்தையும், சிறுமியிடம் கொடுத்திருந்த அர்ச்சகரின் பெயரில் இருந்த சிம் அட்டையைக் கொண்ட கையடக்கத் தொலைபேசியையும் சிறுமி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பருத்தித்துறை நீதிமன்றில் டிசம்பர் 12 ஆம் திகதி நடைபெற்ற வழக்கில் குற்றவாளியாகச் சந்தேகிக்கப்பட்ட அர்ச்சகரின் சார்பில் முன்னிலையான ரெலோவின் முன்னாள் சிரேஸ்ட தலைவரும் மூத்த சட்டத் தரணியுமான என். சிறிகாந்தா அர்ச்சகரை விடுதலை செய்ய வேண்டுமென்று பிணை விண்ணப்பம் செய்த போதும், பாதிக்கப்பட்ட சிறுமியின் நலன் சார்பில் முன்னிலையான பிரபல சமூக சேவையாளரும், சட்டத்தரணியுமான கனகரட்னம் சுகாஸ், குறிப்பிட்ட இரு சந்தேக நபர்களின் விடுதலை தொடர்பாகக் கடுமையான ஆட்சேபனையை முன்வைத்து "சிறுமி ஆலய அர்ச்சகரால் 2 வருடங்களாக வன்புணர்வுக்கு உள்படுத்தப்பட்டுள்ளார். மக்கள் வழிபடும் ஆலயத்துக்குள் இவ்வாறான சமூகப்பிறழ்வு இடம்பெற்றுள்ளமை பாரதூரமான விடயம்.

தொடர்ச்சி 4ம் பக்கம்

# பிரித்தானியாவின் புதிய அரசுடன் இணைந்து பணியாற்ற தமிழ் மக்கள் ஆர்வம்

பிரித்தானியாவில் கடந்த வியாழக்கிழமை(12) இடம்பெற்ற பொதுத் தேர்தலில் பழமைவாதக் கட்சி மிகப்பெரும் வெற்றியீட்டியுள்ளது. பிரித்தானியா வின் இரு பெரும் கட்சிகளில் ஒன்றான தொழிலாளர் கட்சி பலத்த பின்னடை வைச் சந்தித்துள்ளது.

பழமைவாதக் கட்சி சார்பில் போட்டியிட்ட பிரித்தானியா பிரதமர் பொரிஸ் ஜோன்சன் 78 ஆசனங்களை அதிகமாகப் பெற்று மீண்டும் பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



இந்த வெற்றியை தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை பிரித்தானியா மகாராணியை பக்கிங்கம் அரண்மனையில் சந்தித்த ஜோன்சன் தான் பிரதமராக பதவியேற்பதற்கான அனுமதியை பெற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் அவர் மக்களுக்கு ஆற்றிய உரையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறுவது தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை விரைவாக முடிவுக்கு கொண்டு வரும் தமது திட்டத்திற்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளதாகவும், எதிர்வரும் ஜனவரி 31 ஆம் நாள் அது நிறைவேற்றப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

1987ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் மாக்கிரட் தச்சர் மூன்றாவது தடவை பெற்ற பெரும்பான்மை ஆசனங்களுக்குப் பின்னர் கிடைத்த பெரும் வெற்றியாகும்.

இறுக்கமான போட்டியில் இருந்த தொழிலாளர் கட்சி 1935 ஆம் ஆண்டு சந்தித்த மிகப்பெரும் சரிவுக்கு பின்னர் மிகப்பெரும் பின்னடைவை தற்போது சந்தித்துள்ளது. இந்த தோல்வியைத் தொடர்ந்து கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகுவதாக ஜெரமி கோர்பைன் தெரிவித்துள்ளார்.

இது மிகப்பெரும் தோல்வி, என்னை தனிப்பட்ட முறையில் ஊடகங்கள் தவறாக விமர்சித்திருந்தன என அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

பழமைவாதக் கட்சி 364 ஆசனங்களையும், தொழிலாளர் கட்சி 203 ஆசனங்க ளையும், ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி 48 ஆசனங் களையும், மிதவாத ஜனநாயகக் கட்சி 11 ஆசனங்களையும் ஏனைய ஆசனங்களை சிறிய கட்சிகளும், சுயேட்சை வேட்பாளர்களும் கைப்பற்றியுள்ளனர்.

வட அயர்லாந்தில் போட்டியிட்ட அயர்லாந்து புரட்சிகர இராணுவத்தின் அரசியல் பிரிவான சின்பெய்ன் கட்சி ஏழு ஆசனங்களை வட அயர்லாந்தில் கைப் பற்றியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறும் பிரித்தானியா வின் நோக்கத்தை நிறைவேற்றுவது என்பதே பழமைவாதக் கட்சியின் தேர்தல் அறிக் கையின் முக்கிய அம்சமாக இருந்தது. அதற்கு மக்கள் வழங்கிய ஆணையாகவே இந்த வெற்றி அமைந்துள்ளது.



ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியாவின் வெளியே றத்தை நிறுத்துவது அல்லது மற்று மொரு வாக்கெடுப்பை மேற் கொள்வது என்ற கருத்துக்களை முன் வைத்த கட்சிகள் அனைத்தும் கடுமை யான தோல்வியைச் சந்தித்துள்ளன. இந்த தோல்வி ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறுவது உறுதி எனபதைக் காண்பித்துள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, பிரித்தானியா வாழ் தமிழ் மக்கள் பிரித்தானியாவில் உள்ள அரசியல் கட்சிகளை அரசியல் வேறுபாடின்றி ஆதரித்து வருவதுடன் முக்கிய கட்சி களுடன் மிகவும் நெருக்கமான பிணைப்புகளையும் கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் தான் பழமைவாதக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் இரு தேசங்கள் என்று வெளியிடப்பட்ட கொள்கை தொடர்பில் சிறிலங்கா அரசு அதிக சீற்றம் அடைந்திருந்தது. அதனைத் தொடர்ந்து பழமைவாதக் கட்சி தனது நிலைப் பாட்டை மறுத்திருந்தது. ஆனால் புலம்பெயர் தமிழ் மக்கள் புதிய பிரித்தானியா அரசுடன் நெருக்கிமான உறவுகளைப் பேணுவதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சனைகளை அவர்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும்.

அதே சமயம், தமிழ் மக்களின் சுயாட்சி அதிகாரத்தை தமது கட்சி அங்கீகரிப்பதாக இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலில் தொழிலாளர் கட்சி தெரிவித்துள்ளதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

பிரித்தானியாவில் பதவியேற்றுள்ள புதிய அரசுக்கு இலக்கு ஊடகம் தனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், புதிய அரசுடன் இணைந்து பணியாற்ற தமிழ் மக்கள் ஆவலாகவும் உள்ளனர் என்பதை தெரிவித்துக் கொள்கின்றது.

## மீண்டும் 'பழைய' உபாயம்?

கோத்தாபய ராஜபக்ஷ சிங்கள மக்களுடைய வாக்குப் பலத்தில் ஆட்சியைப் பிடித்து விட்டாலும், சர்வதேச ரீதியான அழுத்தங்கள் அவர்களுக்கு நெருக்கடியைக் கொடுப்பதாகத்தான் போகின்றது. குறிப்பாக பெப்ரவரி இறுதி வாரத்தில் ஆரம்பமாகவுள்ள ஜெனீவா கூட்டத் தொடரைத் தாண்டிச் செல்வது அவர்களுக்குச் சவாலானது தான். 2015, 2017 இல் இலங்கை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முன்னேற்றம் குறித்து ஜெனீவாவில் ஆராயப்பட வுள்ளது. வழங்கப்பட்ட கால அவகாசமும் முடிவுக்கு வருகின்றது. அதனால்தான், ராஜபக்ஷக்களுக்குப் பதற்றம் தொற்றிக் கொண்டிருக்கின்றது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராயப்போவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அறிவித்திருப்பது இதனால்தான். இலங்கைக்கான ஐ.நா.வின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹன்னா சிங்கர், மகிந்தவைச் சந்தித்துப் பேசியபோதே, இதனை அவர் கூறியிருக்கின்றார். இது ஒரு உள்ளூர்ப் பொறிமுறையாக இருப்பதால், உள்நாட்டில் அதனை நியாயப்படுத்த முடியும் என்பது அவரது கணிப்பாக இருக்கலாம்.

2009 இல் போர் முடிவுக்கு வந்த போது, யுத்தக் குற்றங்கள் குறித்த விசாரணை முன்னெடுக்கப்படும் என்ற வாக்குறுதி அப்போது ஜனாதிபதியாக இருந்த மகிந்தவினால் ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டது. அது குறித்த அழுத்தங்கள் அதிகரித்து தனியான விசாரணை ஒன்றை முன்னெடுப்பதற்கு ஐ.நா. முயன்றபோதுதான் இந்த ஆணைக்குழுவை மகிந்த அமைத்தார். போர் முடிவடைந்து ஒரு வருடம் கடந்து விட்ட நிலையில் - 2010 மேயில் தான் ஆணைக்குழு அமைக்கப்பட்டது. போர் இடம்பெற்ற சூழ்நிலை குறித்து ஆராய்வதும், அதன் அடிப்படையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற் கான பரிந்துரைகளை வழங்குவதும்தான் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட பொறுப்பு.

18 மாதகாலமாக விசாரணைகளை முன்னெடுத்த குழு, 2011 நவம்பரில் அதன் இறுதி அறிக்கையைக் கையளித்தது. எதிர்பார்க்கப் பட்டதைப் போல, அரசாங்கத்துக்கு சாதகமான அறிக்கை ஒன்றையே இந்தக் குழு வெளியிட்டிருந்தது. குறிப்பாக, அரசாங்கப் படைகள் வேண்டுமென்றே பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்தவில்லை என்பதும், பொதுமக்களைப் பாதுகாப்பதில் அரச படைகள் கவனம் செலுத்தின என்பதும் இந்த அறிக்கையின் முக்கிய அம்சம்.

இந்த அறிக்கை குறித்து மனித உரிமை அமைப்புக்கள் கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்த நியாயமான காரணங்கள் இருந்தன. ஆணைக்குழு சுயாதீனமாகச் செயற்படவில்லை. சாட்சி களுக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை. சர்வதேச தராதரங்களுக்கு இசைவானதாக விசாரணைகள் இருக்கவில்லை. ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணை வரைவறுக்கப்பட்டதாக இருந்தது. இந்தக் காரணங்களால் ஐ.நா. நிபுணர் குழு உட்பட மனித உரிமை அமைப்புக்கள் இந்த அறிக்கையை முற்றாக நிராகரித்திருந்தன.

இந்த அறிக்கையின் பரிந்துரைகள் படிப்படியாக நிறைவேற்றப்படுவதாகச் சொல்லியே மகிந்த அரசாங்கம் 2015 வரை காலத்தைக் கடத்தியது. 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அப்போதைய சிரேஷ்ட அமைச்சர் மகிந்த சமரசிங்க, "ஏற்கனவே 99 வீதமான பரிந்துரைகளை அரசு அமுல்படுத்தியுள்ளதுடன், இதனைக் கொண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்படவுள்ள அமெரிக்க ஆதரவு பிரேணைக்கு முகம் கொடுப்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறோம்" எனத் தெரிவித்திருந்தார்.

ஆக, ஆணைக்குழுவின் அறிக்கை சர்வதேசததைச் சமாளிப்பதற்கான ஒரு உபாயமாகத்தான் அரசாங்கத்தினால், பயன்படுத்தப்பட்டுள்ளதே தவிர, நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல. இப்போது, மகிந்தவும் அந்த அறிக்கையைத் தூசி தட்டி எடுத்திருப்பது நல்லிணக்கத்துக்காகவல்ல. வரப்போகும் 'ஜெனீவா' என்ற நெருப்பாற்றை நீந்திக் கடந்து விடுவதற்காகத்தான்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் போர்க் குற்றங்களில் சம்பந்தப்பட்ட படையினரைப் பாதுகாப்பதைத்தான் இலக்காகக் கொண்டிருந்தது. அதனைக்கூட அரசாங்கம் நடைமுறைப் படுத்தவில்லை. அதனால்தான் ஜெனீவாவில் இரண்டு தீர்மானங்கள் அதன்பின்னர் கொண்டுவரப்பட்டன. அதுகூட, தமிழர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றக் கூடியதாக இருக்கவில்லை.

இப்போது, பழைய உபாயத்தையே மீண்டும் பயன்படுத்தி சர்வதேசத்தை திசை திருப்ப அரசாங்கம் முற்படுவதைத்தான் மகிந்தவின் அறிவிப்பு உணர்த்துகின்றது. இவ்விடயத்தில் சர்வதேசம் அவதானமாக இருப்பது அவசியம். தமிழத் தரப்பினரும் இதற்கு இடம் கொடுக்காமல், சர்வதேச சமூகத்துக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலமாகவே தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**- ஆசிரியர்**

# மணல் வாகன வழித்தட அனுமதி நீக்கத்தால்
# வடக்கின் சுற்றுச் சூழலுக்குப் பேராபத்து

## பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை



மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்குரிய வழித்தட அனுமதியைப் புதிய அரசாங்கம் நீக்கியுள்ளதால் வடக்கில் மணற் கொள்ளை பெரும் வேகம் எடுத்துள்ளது.. இவ்வாறு கட்டுப்பாடற்ற முறையில் மணல் வளம் சுரண்டப்படுவதால் விரைவில் மணல் வளத்துக்குப் பற்றாக்குறைவு ஏற்படவுள்ளதோடு, வடக்கின் சுற்றுச் சூழலுக்கும் பேராபத்து நிகழவுள்ளது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு அவசியமாக இருந்த வழித்தட அனுமதியை அரசாங்கம் அண்மையில் நீக்கியுள்ளது. இது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில்,

மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்களுக் குரிய வழித்தட அனுமதியைப் புதிய அரசாங்கம் நீக்கியுள்ளதால், வடக்கில் மணற் கொள்ளை பெரும் வேகம் எடுத்துள்ளது. இவ்வாறு கட்டுப்பாடற்ற முறையில் மணல்வளம் சுரண்டப்படுவதால் விரைவில் மணல் வளத்துக்குப் பற்றாக் குறைவு ஏற்படவுள்ளதோடு, வடக்கின் சுற்றுச் சூழலுக்கும் பேராபத்து நிகழவுள்ளது.

மணல் வளம் கட்டுமானத்துக்கும் அபிவிருத்திக்குமான வளம் மாத்திரம் அல்ல. கரையோர மணற்குன்றுகள் கடல் நீர் உட்புகுவதைத் தடுக்கும் அரண்களாகப் பயன்படுவதோடு, நிலத்தடி நீர் மட்டத்தின் அளவிலும் பாரிய செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. நிலத்தின் அடியில் கடல் நீரில் மிதந்து கொண்டிருக்கும் நன்னீர் வில்லையின் தடிப்பை மணற் குன்றுகளின் உயரமே தீர்மானிக்கின்றது. மணற் குன்றுகளின் உயரம் குறையக் குறைய நிலத்தின் கீழே நன்னீர் வில்லையின் தடிப்புக் குறைந்து, அவ்விடத்தைக் கடல்நீர் ஆக்கிரமிக்கின்றது. மண்கும்பான் என்ற நன்னீர் கிராமம் இன்று குடிநீர்த் தட்டுப்பாட்டுக்கு ஆளாகியிருப்பதன் பின்னணி இதுதான்.

இதற்கு முன்னரும் சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெற்றிருந்தாலும், அதனை ஏற்றிச் செல்வதற்கான வழித்தட அனுமதி மணற் கொள்ளையை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்தி வைத்திருந்தது. தற்போது வழித்தட அனுமதி தேவையற்றதாக்கப்பட்டு காவல் துறையின் சோதனைக் கெடுபிடிகள் இல்லை என்றதும், சட்டவிரோத மணல் அகழ்வு விஸ்வரூபம் பெற்றுள்ளது. இது மண்கும்பானில் மணல் ஏற்றிய உழவூர்திக்குத் தீ வைக்கும் அளவிற்கு கடலோரக் கிராமங்களில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அபிவிருத்தியில் ஏற்படும் தாமதங்களையோ அல்லது வேறு காரணங்களையோ அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் வழித்தட அனுமதியைத் தேவையற்றதாக்கும் முடிவை எடுத்திருக்கலாம். இம்முடிவு தென்னிலங்கையின் சுற்றுச் சூழலுக்கு ஏற்புடையதாகவும் இருக்கலாம். ஆனால், நிலத்தடிநீரை உயிர் ஆதாரமாகக் கொண்ட வடக்கின் சுற்றுச் சூழலுக்கும், வடக்கின் நிலைத்த அபிவிருத்திக்கும் இம்முடிவு எவ்வகையிலும் பொருத்தம் அற்றதாகும்.

நடைமுறையில் இருக்கும் மணல் அகழ்வுக்கான அனுமதியினால் மட்டும் மணற் கொள்ளையையோ, அதன் காரணமாக ஏற்படவுள்ள சுற்றுச் சூழல் பிரச்சினைகளையோ ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது. இதனைக் கருத்திற் கொண்டு, பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் வழித்தட அனுமதி நீக்கத்தினால் வடக்குக்கு ஏற்படவுள்ள பாதிப்புகளை அரசுக்கு எடுத்து சொல்லி மீளவும் அதனை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு உடனடியாக ஆவன செய்யவேண்டும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# அல்லலாடும் அமெரிக்காவின் ஒப்பந்தம்
# பின்னணியில் இந்தியா?

சிறீலங்காவின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நோர்வேயின் உடன்பாட்டில் கையெப்பமிட்டது போல நாம் அமெரிக்காவின் மிலேனியம் சலஞ் ஒப்பந்தத்தில் கையொப்பமிடப் போவதில்லை என சிறீலங்கா அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சிறிலங்கா அமைச்சர் டலஸ் அழகப்பெருமா கடந்த வெள்ளிக்கிழமை(13) கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்துள்ளதாவது:



சிறீலங்காவின் புதிய அரச தலைவர் அமெரிக்காவின் உடன்பாட்டில் கையெப்பமிடப் போவதில்லை. விடுதலைப்புலிகளுடன் போர் நிறுத்த உடன்பாட்டில் ரணில் கையொப்பமிட்டது யாருக்கும் தெரியாது. அது தொடர்பில் நாடாளு மன்றத்திற்கோ அல்லது மக்களுக்கோ தெரிவிக்கப்படவில்லை.

எனவே கோத்தபயா அமெரிக்காவின் உடன் பாட்டில் தன்னிச்சையாக கையொப்பமிடமாட்டார். அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதங்களை மேற்கொண்ட பின்னரே முடிவு எடுக்கப்படும். தேவையேற்படின் உடன்பாட்டில் மாற்றங்களும் மேற்கொள்ளப்படும்.

அமெரிக்காவின் உடன்பாட்டை நிராகரிப்பதா அல்லது ஏற்றுக்கொள்வதா என்பது தொடர்பில் முடிவுகள் ஏதும் எட்டப்படவில்லை. அமெரிக்காவின் உடன்பாட்டை யாரும் முழுமையாக படிக்கவில்லை.

முன்னைய அரசு வெளியிட்ட அமெரிக்காவின் உடன்பாடு தொடர்பான ஆவணத்தில் பல பக்கங்கள் காணாமல் போயிருந்தன. ஆனால் நாம் அதனை முழுமையாக வெளியிடவுள்ளோம் என தெரிவித்துள்ளார்.

இதனிடையே, புதிய அரசு அமெரிக்காவின் எந்த உடன்பாட்டிலும் கையொப்பமிடவில்லை என சிறீலங்கா அரசு கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் மிலேனியம் சலஞ், சோபா உடன்பாடு, ஏசிஎஸ்ஏ உடன்பாடு ஆகிய 3 உடன் பாடுகளிலும் சிறீலங்கா அரசு கையொப்பமிடவில்லை என தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் உடன்பாட்டுகளுக்கு எதிராக தென்னிலங்கை மருத்துவர் சங்கப் பிரதிநிதிகள், பௌத்த துறவிகள் மற்றும் சட்டவாளர்கள் வழக்குகளை பதிவு செய்திருந்தனர்.

வழக்கு விசாரணைகள் எதிர்வரும் மார்ச் 25 ஆம் நாளுக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இதனிடையே, அமெரிக்காவின் உடன்பாட்டை செயற்படுத்த விடாது தடுப்பதில் இந்தியா முக்கிய பங்கு வகிப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் மிலேனியம் சலஞ் நிதிக்கு இணையான நிதியை இந்தியா சிறிலங்காவுக்கு வழங்கியுள்ளதுடன், கோத்தபாய அரச தலைவராக வருவதை இந்தியாவே ஆதரித்ததாக அவை மேலும் தெரிவித்துள்ளன.

2ம் பக்கத் தொடர்ச்சி... சிறுமி மீது ....

இதனை சமூகத்தில் அனுமதிக்கவே முடியாது. சிறுமி பராயமடையாதவர். அவருக்கு அர்ச்சகரால் தனக்கு இழைக்கப்பட்ட பாதிப்பை விவரிக்க முடியாது. அதனால்தான் சட்ட மருத்துவ அறிக்கையைக் கோருகின்றோம். பராயமடையாத சிறுவர்களின் காப்பகமாக நீதிமன்றமே உள்ளதால், முதலாவது சந்தேக நபரான அர்ச்சகரும் அவருக்கு உடந்தையாக விருந்த சிறுமியின் சித்தப்பாவையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க வேண்டும்" என்று சட்டத்தரணி சுகாஸ் மன்றுரைத்தார்.



அவரது மன்றுரைப்பை அடுத்து இருதரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த நீதிவான் சந்தேக நபர்களின் பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு அவர்களது விளக்கமறியலை நீதிமன்றம் மேலும் 20 ஆம் திகதி வரை நீடித்துள்ளதுடன் சிறுமியின் சட்ட மருத்துவ அறிக்கையையும் அவரது வாக்குமூலத்தையும் எதிர்வரும் 20ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்க நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

அதேவேளை, ஆலய வளாகத்தினுள் நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை மக்கள் அதிர்ச்சியும், கவலையும் கொண்டிருந்ததுடன் குறித்த குற்றவாளிகள் மீது தமது கண்டனத்தையும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ள அனர்த்தம் இன்னும் மீளாத மட்டக்களப்பு

கிருஷ்ணா

இலங்கை முழுவதும் கடந்த இரு வாரங்களாக பெய்த மழை மக்களுக்கு பெரும் அழிவுகளையும் துன்பங்களையும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கையினை பொறுத்தவரையில் இந்த மழை காரணமாக அதிக பாதிப்புகளை எதிர்கொண்ட மாவட்டமாக மட்டக்களப்பு கருதப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டமானது நிலப்பரப்



பினை விட நீர்நிலைகள் கூடிய பகுதியாக காணப்படுகின்றது. மழைக் காலங்களில் பல பகுதிகள் நீரில் மூழ்கும் நிலையேற்படுகின்றது. இதனால் பெரும்பாலான பகுதிகளுக்கான போக்குவரத்துகள் பாதிக்கப்படும் நிலையேற்படுகின்றது. குறிப்பாக படுவான்கரை பகுதிக்கான போக்குவரத்துகள் பெருமளவில் துண்டிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தினை பொறுத்தவரையில் படுவான்கரை, எழுவான்கரையென இரண்டு பகுதிகளாக மட்டக்களப்பு வாவியினால் பிரிக்கப்படுகின்றது. படுவான்கரை பகுதியானது பெருமளவில் விவசாயிகளையும் சாதாரண தொழிலாளர்களையும் அதிகமாக கொண்ட பகுதி. இப்பகுதிகளில் விவசாயம், மழை காலங்களில் முற்றாக பாதிக்கப்படுவதுடன் விவசாயிகள் பாரியளவில் பொருண்மிய இழப்புக்களையும் எதிர் கொள்கின்றனர். அத்துடன் தொழிலாளர்களும் தொழிலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்படுகின்றது.

இவ்வாறான நிலையில், கடந்த இரு வாரங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான நீர் ஏந்தும் நீர் நிலைகளான நவகிரி, புலுக்குனாவை, உன்னிச்சை, கித்துள், வாகனேரி ஆகிய குளங்களில் நீர் மட்டம் அதிகரித்ததன் காரணமாக வான் கதவுகள் திறக்கப்பட்டமையினாலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மக்கள் பாதிக்கப்பட்ட நிலையேற்பட்டது. குறிப்பாக ஏறாவூர்ப்பற்று, கிரான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதிகளவான பாதிப்புகள் ஏற்பட்டன.

### போக்குவரத்துகள் பாதிப்பு

கடும் மழை காரணமாக பல பகுதிகளின் தரைவழி போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டன. குறிப்பாக போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மண்டூர்-வெல்லாவெளி வீதி வெள்ளத்தில் மூழ்கியதன் காரணமாக மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களுக்கான படுவான்கரை போக்குவரத்துகள் முற்றாக பாதிக்கப்பட்டிருந்தன. அதேபோன்று இராணமடு-மாலையர்கட்டு பாலத்தின் ஊடாக வெள்ளம் பாய்ந்ததன் காரணமாக சின்னவத்தை உட்பட பல பகுதிகளுக்கான போக்குவரத்துகள் பாதிக்கப் பட்டன.
அத்துடன் கிரானுக்கும் புலிபாய்ந்தகல் லுக்கும் இடையில் வெள்ள நீர் பாய்ந்ததன் காரணமாக ஊலாகாடு, இலுக்குவேதம், முருத் தானை, பெண்டுகள்சேனை, ஈரளகுளம், பெரிய வெட்டுவான், பெருமாவெளி உட்பட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியதுடன் போக்குவரத்துகளும் துண்டிக்கப்பட்டன. வடமுனை ஊத்துச் சேனைக்கான போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டதுடன் அப்பகுதிக்கான போக்குவரத்துகளை எதிர் கொள்வதில் மக்கள் பல்வேறு அசௌரியங்களை எதிர் கொண்டனர்.

கிரான் பாலத்தை ஊடறுத்து வெள்ள நீர் பாய்வதனால் அங்கு மக்களின் போக்குவரத்துக்காக 5 இயந்திரப் படகுகள் சேவையில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது அப்பகுதியிலிருந்து கல்வி பயிலும் கல்விப் பொது தராதர சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றும் 2 மாணவர்கள் இவ் இயந்திரப்படகு மூலமே தங்களின் பயணத்தை மேற்கொண்டு பரீட்சை எழுதியதும் குறிப்பிடத்தக்கது இதே போன்று சித்தாண்டி, ஈரலக்குளம் வீதிக்கும் இயந்திரப் படகுகள் மூலமே மக்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

### இடைத்தங்கல் முகாம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக மாவட்டத்தின் 12 பிரதேச செயலக பிரிவுகளை சார்ந்த 19263 குடும்ப



ங்களின் 66736 பேர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் 6696 குடும்பங்களைச் சேர்ந்த 22614 பேர் இடம் பெயர்ந்த நிலையில் எட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிலே 02 இடைத்தங்கல் முகாம்களும், மண்முனை பற்று ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவிலே 01 இடைத்தங்கல் முகாமும், போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவிலே 01 இடைத்தங்கல் முகாமும், ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலக பிரிவிலே 4



இடைத்தங்கல் முகாம்களும் அமைக்கப்பட்டு மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

### வீடுகள் பாதிப்பு

வெள்ள நிலைமை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 73 வீடுகள் சேதமடைந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்தது. இதில் போரதீவுப்பற்று



பிரதேச செயலாளர் பிரிவில் 27 வீடுகளும் .மண்முனை மேற்கு பிரதேச செயலகப்பிரிவில் 18 வீடுகளும் சேதமடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது

### விவசாயம் பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தினை பொறுத்தவரையில் விவசாயமே பெருமளவான மக்களின் ஜீவனோபாய தொழிலாகவும், வாழ்வாதாரமாகவும் இருக்கின்றது. சிறுபோக செய்கை பண்ணப்பட்டு சில தினங்களிலேயே மழை பெய்து பாரிய வெள்ள நிலைமை ஏற்பட்டதன் காரணமாக விவசாயிகள் பாரிய பொருண்மிய இழப்புக்களை எதிர் கொண்டுள்ளனர்.

இதுவரைக்கும் ஆயிரக் கணக்கான ஏக்கர் விவசாயம் முற்றாக அழிவுற்றுள்ளதாக விவசாய அமைப்புகள் தெரிவித்துள்ளன. எனினும் மாவட்ட விவசாய திணைக்களம் அது தொடர்பான தரவுகளை தற்போது சேகரித்து வருவதாகவும் அது தொடர்பான புள்ளி விபரங்கள் கிடைக்கப் பெற்றதுடன் முழு தகவல்களும் வழங்கப்படும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார் தெரி வித்தார்.

### இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிகள்

இடம்பெயர்ந்து முகாம்களில் இருந்த மக்களுக்கு உடனடியாக அப்பகுதி கிராம சேவையாளர்கள் ஊடாக சமைத்த உணவுகள் வழங்கப்பட்டதுடன் அவர்களுக்கு தேவையான சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதாகவும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். அத்துடன் தற்போது வெள்ள நீர் வடிந்து வருவதன் காரணமாக முகாம்களில் தங்கியுள்ள மக்கள் வீடுகளுக்கு செல்ல ஆரம்பித்துள்ளதால், அவர்களுக்கான உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

### நிவாரணப்பணிகளைஒருங்கிணைக்கும் நடவடிக்கை

அரச நிறுவனங்கள், அரசார்பற்ற நிறுவனங்கள், மற்றும் பொது அமைப்புகளை இணைத்து, மாவட்ட செயலகமும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி அடுத்த பக்கம்

# எமது போராட்டம் அனைத்துலகத்தின் கவனத்தை ஈர்த்து வருகின்றது



கே. ராஜ்குமார்

எமது போராட்டத்தினால் அரசாங்கத்திற்கு சர்வதேசரீதியாக அழுத்தங்கள் இருப்பதால், அரசாங்கம் எமது போராட்டத்திற்கு தொடர்ந்து அச்சுறுத்தல் விடுத்து வருகின்றது. எமது போராட்டம் சரியான பாதையில் செல்கின்றது என்பது எங்களுக்குத் தெரியும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்பின் வவுனியா மாவட்ட செயலாளர் திரு கே. ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

இலக்கு வார இதழ் மற்றும் இணையத்தளம் ஆகியவற்றிற்கு அவர் வழங்கிய நேர்காணலின் முழுமையான வடிவம் வருமாறு:

**கேள்வி:**

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தமிழ் மக்கள் மேற்கொண்டு வரும் போராட்டம் ஆயிரம் நாட்களைத் தாண்டி நடைபெற்று வருகின்றது. இந்தநிலையில், இந்த போராட்டங்கள் எந்த வகையில் சிறீலங்கா அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்துள்ளது?**

**பதில்:**

இன்று 1027ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றோம். எமது போராட்டத்தினால் அரசாங்கத்திற்கு சர்வதேச ரீதியாக அழுத்தங்கள் இருப்பதால், அரசாங்கம் எமது போராட்டத்திற்கு தொடர்ந்து அச்சுறுத்தல் விடுத்து வருகின்றது. எமது போராட்டம் சரியான பாதையில் செல்கின்றது என்பது எங்களுக்குத் தெரியும். அத்துடன் சங்கங்களை பிரித்து கையாள்வதும், உடைக்க முற்படுவதும், சில சங்கங்களின் போராட்டங்களை மூவினப் போராட்டமாகச் செய்வதும் அறியக் கூடியதாக உள்ளது.

அத்துடன் ஐ.நா. பாதுகாப்பு சபையில் கடந்த வருடம் மே மாதம் 22ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இது எமது போராட்டத்திற்கு கிடைத்த முதல் வெற்றியாகவே நாங்கள் பார்க்கின்றோம். இரண்டாவதாக சர்வதேச ஊடகங்கள் அனைத்திலும், உலக நாடு எங்கிலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற்றோரின் போராட்ட செய்திகள் முன்னணியாக வந்துள்ளது. இந்தப் போராட்டம் அரசியலில் மிகப் பெரியதொரு மாற்றத்தைக் கொண்டு வரும். புகைப்படம் ஒன்றின் மூலமாகவே தான் வியட்நாமின் யுத்தம் முடிவிற்கு கொண்டு வருமளவிற்கு உலக ஆதரவு பெருகியது என கூறப்படுகிறது. இந்த வகையில் எங்கள் போராட்ட செய்திகள் உலகம் எங்கும் பரவி, தீர்விற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கி வருகிறது என நம்புகிறோம்.




**கேள்வி:**

**சிறீலங்கா அரசு வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்ட எம்முறவுகளை கண்டுபிடித்து தரும் என்றோ, குற்றம் புரிந்தவர்களை நீதியின் முன் நிறுத்தும் என்றோ நம்புகிறீர்களா?**

**பதில்:**

காணாமல் ஆக்குவதில் முன்னின்றவர்களை தலைமை பொறுப்புக்களில் அமர்த்தும் புதிய அரசாங்கம் தீர்வு தரும் என்று எங்களுக்கு நம்பிக்கையில்லை. அதற்காகத்தான் வெளிநாடுகளிடம் உதவி கோருகின்றோம். நாம் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கும் போது, அலரிமாளிகையில் அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையில், உங்கள் அரசாங்கத்தை நம்பி நாங்கள் இருக்கின்றோம். ஐந்து அரசியல் கைதிகளையாவது விடுதலை செய்யும்படி கோரியிருந்தோம். ஆனால் இதுவரை அது நடைபெறவில்லை. புதிய அரசாங்கமும் இதை செய்யவில்லை. இதுவே எதிர்வரும் தேர்தல்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் நாங்கள் அறிந்து கொள்கின்றோம். இது தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும்.

**கேள்வி:**

**இந்த போராட்டத்தை சிறீலங்கா அரசு உதாசீனப்படுத்தி வருவதால் அதனை நாம் அனைத்துலக சமூகத்திடம் கொண்டு செல்ல வேண்டும். அதற்கான பொறிமுறைகள் உங்களிடம் உண்டா?**

**பதில்:**

புலம் பெயர் தமிழர்கள் ஏற்கனவே இந்தப் போராட்டத்திற்கு உறுதுணையாகவே இருக்கின்றார்கள். ஆட்சி மாற்றத்தின் பின்னர் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வில், புலம் பெயர் தமிழர்கள் வந்து பெருமளவில் கலந்து கொண்டதானது, உலகத்திற்கு ஒரு செய்தியைச் சொல்லியிருக்கின்றது. புலம்பெயர் மக்கள் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். எமது போராட்டத்தில் நாம் தொடர்ந்து போராடினால் நிச்சயம் ஒரு வெற்றியை அடையலாம். இன்றைய போராட்டம் 1027ஆவது நாளாகத் தொடர்கின்றது.

அதேவேளை பாதுகாப்புச் செயலாளரான கமால் குணரட்ண யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கின்றார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாம் வியாழக்கிழமை(12) ஒரு போராட்டத்தை மேற்கொண்டிருந்தோம். போர்க்குற்றவாளி கமால் குணரட்ண, பாதுகாப்புச் செயலாளராக மீண்டும் அதிகாரத்திற்கு வந்துள்ளார். இது அவர்களின் தமிழினப் படுகொலையைத் தொடர்ந்து ஊக்குவிக்கும்.

யுத்தக் குற்றவாளிகளிலிருந்து தமிழர்களைப் பாதுகாக்க அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா எங்களுக்குத் தேவை. 1987ஐவிட 2019 தான் இந்தியா தன்னை பாதுகாக்க ஒரு சிறந்த உண்மையான தருணம். அதை உணர்ந்து இந்தியா செயற்படும் என நாம் நம்புகின்றோம்.

## முன்பக்கத் தொடர்ச்சி... வெள்ள....

### வெள்ள காலத்தில் அதிகாரிகள் செயற்பாடு-மக்கள் குறைகள்



மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள சில பகுதிகளில் உள்ள கிராம சேவையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

போரதீவுப்பற்று, கிரான், வாகரை, மண் முனை வடக்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் சில கிராமசேவையாளர்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கு சரியான வசதி களை சாட்டுகள் மக்களினால் முன்வைக்கப்படுகின்றன.

வீடுகளில் தண்ணீர் புகுந்த நிலையில் முகாம்களுக்கு சென்ற போதிலும் அவர்களை முகாம்களுக்குள் ஏற்றுக் கொள்ளாத நிலையும் இருந்ததாகவும் சில பகுதிகளில் கிராம சேவையாளர்கள் சரியான இடைத்தங்கல் முகாமகளை ஏற்படுத்திக் கொடுக்கவில்லையென வும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இடைத்தங்கல் முகாம்களை விட பாதிக்கப்பட்ட மக்கள் அதிகளவில் உறவி னர்கள், நண்பர்கள் வீடுகளில் தஞ்சமடைந் திருந்த நிலையில், அவர்கள் தொடர்பில் முறையான நடவடிக்கை கள் மேற்கொள்ளப் படவில்லையென்பதுடன் அவர்களுக்கான அடிப்படை தேவைகள் குறித்தும் அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லையெனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். சில அதிகாரிகள் தாம் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட போதிலும் தம்மை வந்து பார்வையிட்டு தமக்கான உதவி களை வழங்க தவறியதாகவும் குற்றஞ்சாட்டுகின்றனர்.



இக்குற்றச்சாட்டுகள் தொடர்பில் மட் டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம் கேட்டபோது வெள்ளம் ஏற்பட்ட காலம் தொடக்கம் சகல அதிகாரிகளும் அர்ப்பணிப்பு டன் தமது கடமைகளை செய்து வருவதாகவும் ஒரு சில அதிகாரிகள் செய்யும் இவ்வாறான குற்றச்சாட்டுக்களினால் ஏனைய செயற்பாடுகளும் பாதிக்கப்படுவதாகவும் இது தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் சிந்தனைகள் இன்றைய காலத்தின் தேவையாகிறது

**- ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன் -**



சிறிலங்காவில் பௌத்த சிங்களப் பெரும்பான்மையினர், 'சிறிலங்காவினர்' எனத் தங்களை அழைத்துக்கொள்ளும், அதே அரசியல் அடையாளத்துள்ளேயே, இலங்கையின் எல்லா மக்களும் வாழ்தல் வேண்டும் என்பது 2009இல் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு மூலம் நிலைநிறுத்தப்பட்ட மகிந்த சிந்தனை. பத்தாண்டுகளின் பின்னர் 'அண்ணன் காட்டிய வழியம்மா' என அவ்வழியைச் "சிறிலங்காவினர்க்கான அபிவிருத்திகள்" என்ற வார்த்தைஜாலங்கள் மூலம் நாட்டின் முன்னேற்றத்துக்கான புது வழியாக கோத்தபாய சிந்தனை காட்ட முற்பட்டிருக்கிறது. எப்பொழுதுமே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வை வடக்கு கிழக்கின் அபிவிருத்தி என்பதுடன் இணைத்து, ஈழத்தமிழர்களின் தாயகம் - தேசியம் - தன்னாட்சி என்ற தொன்மையும் தொடர்ச்சியுமான உரிமைகளை மறுத்து, சிறிலங்கா என்னும் நாட்டு அடையாளத்துடன் வாழும் சிறிலங்காவின் சிறுபான்மையினமாக அவர்களின் அடையாளத்தை நிலைப்படுத்திச் சில அபிவிருத்தித் திட்டங்களை முன்வைத்து அவற்றில் பங்கெடுக்க வரும் சர்வதேச அரசுக்களின் நிதி மற்றும் ஆயுத ஆதரவையும் பெற்று வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் மேல் தன் அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்வது சிறிலங்கா அரசின் வழமையாகத் தொடர்கிறது.

இவ்வாறு தமிழர்களின் தேசியப் பிரச்சினை (Tamil's National Question) என்ற ஒன்றே இலங்கையில் இல்லை எல்லாமே அபிவிருத்திப் பிரச்சினை யெனச் சிறிலங்கா உலகுக்குக் காட்ட முற்படும் இவ்வேளையில், இலங்கையில் தமிழர்களின் தேசியப் பிரச்சினை என்றால் (Tamil's National Question) இதுதான் என உலகுக்குத் தெளிவாகவும் உறுதியாகவும் எடுத்துரைத்து வந்த தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் தெளிவான அரசியல் சிந்தனைகள் நினைவுக்கு வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் நினைவேந்தல் நாளான டிசம்பர் 14ம் நாளன்று உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் நன்றியுடன் அவரை நினைவு கூர்ந்து வீரவணக்கம் செய்வது தமிழர் சமுதாய வழமையாக உள்ளது.

இவ்வாண்டு அவரின் 13வது ஆண்டு நினைவேந்தல் காலமான டிசம்பர் மாதத்தில் ஈழத்தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு இன்றைய காலகட்டத்தில் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் சிந்தனைகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைச் சிந்திப்பது சாலப் பொருத்தமாக அமைகிறது.

"மாநிலங்களுக்கு இறையாண்மை அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்குப் பதிலாக, அதிகாரப் பரவலாக்கம் பற்றியே அவர்கள் சிந்திக்கின்றார்கள்" (போரும் சமாதானமும் 647) என்ற தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் கருத்து இன்றைய காலகட்டத்தில் தெளிவாக உலகுக்கு மீளவும் எடுத்துச் சொல்லப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. இந்தச் சிந்தனையே இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வைக் காண முடியாத நிலையை உருவாக்கி வருகிறது. அதிகாரப்பரவலாக்கம் என்பது எப்பொழுதும் மையப்படுத்தப்பட்டுள்ள தங்களின் அதிகாரத்தை மற்றைய மாநிலங்கள் மேல் நடைமுறைப்படுத்துவதற்கான உத்தியே தவிர இலங்கைத் தீவு போன்ற வரலாற்றில் இரு தேசியங்களின் இறைமைகளை இறைமை இழப்பு ஏற்படாது பகிர்ந்து கொள்வதற்கு எந்த விதத்திலும் பயனளிக்காது. உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் "பிரதேச சுயாட்சி" என்பதே தமிழர்களின் வரலாற்றுத் தாயகத்தில் அவர்களுடைய தன்னாட்சி உரிமை இழப்பின்றி இறைமை பகிரப்படுவதற்கான நேர்மையான வழியாக அமையலாம்.

ஒரு அரசு தனது மக்கள் என்று கூறிக்கொள்பவர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமைக்கு மதிப்பளித்து நடக்கும் பொழுதே அந்த அரசுக்கு பிரதேச ஒருமைப்பாடு உள்ளதென்பதையும் தனது மக்களை அடக்கு முறைக்கு உள்ளாக்கும் போது அந்த அரசு அந்த மக்கள் மீதான பிரதேச ஒருமைப்பாட்டு உரிமையைத் தானே இழந்து விடுகிறது என்ப தையும் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கியூபெக் மாநிலத்தின் பிரிவினைப் பிரச்சினையை கனடிய உச்ச நீதிமன்றம் விசாரித்து அளித்த தீர்ப்பின் பின்வரும் வாசகங்களின் அடிப்படையில் பின்வருமாறு விளக்குகிறார்:-

'தன்னாட்சி உரிமை (சுயநிர்ணய உரிமை) என்பது வளர்ந்து வரும் ஒரு கருத்துருவம். பரிணாமம் பெற்று வரும் ஒரு கோட்பாடு. சர்வதேசச் சட்டத்துறையில் புத்தாக்கம் பெற்று வரும் விதியாகவும், சர்வதேச மனித உரிமை நியம



மாகவும் இது கொள்ளப்படுகிறது. சுயநிர்ணய உரிமைக் கோட்பாடானது, ஆரம்பத்தில் மேற்குலக வல்லரசுகளின் குடியேற்றத்திற்கு அடிமைப் படுத்தப்பட்ட நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. 1970ம் ஆண்டுக்குப் பின்பு இக்கோட்பாடு புத்தாக்கம் கண்டது. பிரத்தியோகமாகக் குடியேற்ற நாட்டு மக்களின் அரசியல் சுதந்திரத்திற்கான தகைமையை நிர்ணயிப்பதற்காகப் பிரயோகிக்கப்பட்டது. இவ்வாண்டிலேயே ஐக்கிய நாடுகள் சபையில் 'அரசுகள் மத்தியில் நல்லுறவையும் ஒத்துழைப்பையும் நிலைநாட்டுவது பற்றிய சர்வதேச சட்ட விதிகள் என்ற புதிய பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.

இப்பிரகடனத்தில் "சுயநிர்ணயமும் சம உரிமை விதிகளும்" என்ற தலைப்பில் நிறைவேற்றப்பட்ட ஒரு விதி பின்வருமாறு உள்ளது :- " ஐநா சாசனத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் சம உரிமைகளும் மக்களது சுயநிர்ணயமும் என்ற விதிக்கு இணங்க, எல்லா மக்களும் வெளிப்புறத் தலையீடு எதுவுமின்றி, தமது அரசியல் தகைமையைச் சுதந்திரமாகத் தீர்மானிப்பதற்கும், தமது பொருளாதார, சமூக,கலாசார வளர்ச்சியைப் பேணுவதற்கும் உரிமை உடையவர்களாவர். இந்தச் சாசனத்திற்கு அமைய ஒவ்வொரு அரசும் இந்த உரிமைக்கு மதிப்பளிக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

"இப்போதுள்ள அரசுக்கள், கனடா உட்பட தமது பிரதேச ஒருமைப்பாட்டைப் பேண விழைவதற்கும், ஒரு 'மக்கள்' ஒரு சுயநிர்ணய உரிமையை முழுமையாகப்; பெற்றுக் கொள்ள முனைவதற்கும் இடையில் மத்தியில் முரண்பாடு எழுவதற்கு அவசியமில்லை. எவ்வித பாகுபாடுமின்றி முழு மக்களையும் அல்லது மக்கள் சமுகங்களையும் தனது ஆட்சி அமைப்பில் பிரதிநிதப்படுத்தி, உள்ளீட்டான ஆட்சி ஒழுங்கில் சுயநிர்ணயத்தின் விதிகளுக்கு ஒரு அரசு மதிப்பளிக்குமானால், சர்வதேச சட்டத்திற்கு அமைய தனது பிரதேச ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கு அந்த அரசுக்கு உரிமையுண்டு. ஒரு அரசின் பிரதேச ஒருமைப்பாட்டை இந்தப் பிரகடனம் உறுதிப்படுத்துகிறது. ஆனால் ஒரு சிறுபான்மை மக்களை அடக்கு முறைக்கு ஆளாக்கும் பொழுது, பிரிவினைக்கு இடமளிக்கும் விதிவிலக்காக, ஒரு அரசு தனது பிரதேச ஒருமைப்பாட்டு உரிமையை இழக்கிறது.

எனவே இந்த விளக்கத்தின் மூலம் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் இலங்கை அரசாங்கம் இலங்கைத் தமிழ் மக்களின் மேலான தனது அடக்கு முறைகளால் தமிழர் தாயகப் பகுதிகளில் தானாகவே தனது பிரதேச ஒருமைப்பாட்டை இழந்து விட்டது என்பதை மிக அழகாக விளக்குகிறார்.

ஒருதலைபட்சமான பிரிவினையைப் பிரகடனம் செய்யும் பிரத்தியோகச் சூழ்நிலை பற்றிய கனடிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: -

அரசியல் சுதந்திரத்தைத் தேர்ந்தெடுக்கும் அல்லது நிறுவிக் கொள்ளும் உரிமையான வெளியக சுயநிர்ணய உரிமை இரு வகுப்பினரான மக்களுக்கு (குடியேற்ற ஆட்சியின் கீழுள்ள மக்களுக்கு அல்லது அந்நிய ஆதிக்கத்தின் கீழுள்ள மக்களுக்கு) உரித்தாகும். ஏகாதிபத்திய வல்லரசிடமிருந்து உறவை முறித்துக் கொண்டு தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்குக் குடியேற்ற நாட்டு மக்களுக்கு உரிமையுண்டு என்பது இப்பொழுது விவாதத்திற்கு இடமற்ற உண்மையாகி விட்டது. குடியேற்றத்திற்கு வெளியான சூழ்நிலையை எடுத்துக் கொண்டால், ஒரு மக்கள் சமுகம் அந்நிய அடக்கு முறைக்கும், ஆதிக்கத்திற்கும், சுரண்டல் முறைக்கும் ஆளாகும் பொழுது வெளியக சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டலாம். ஒருதலைபட்சமான பிரவினைக்கு சுயநிர்ணய உரிமையைப் பாவிக்கும் மூன்றாவது சூழ்நிலை பற்றியும் சில மதிப்புரைஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். இந்த மூன்றாவது சூழ்நிலை குறித்துப் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்ட போதும், ஒரு மக்கள் சமுகம் தனது உள்ளக சுயநிர்ணய உரிமையை அர்த்தமுள்ள முறையில் அடைவதற்குத் தடையேற்படுமானால், இறுதி வழிமுறையாகப் பிரிந்து செல்லும் உரிமையைப் பயன்படுத்த அந்த மக்களுக்கு உரிமையுண்டு." என்கிறது.

எனவே ஒரு அரசு தனது மக்களின் சமமான உரிமைகளையும் உள்ளக சுயநிர்ணய உரிமையையும் தனது அரசின் கட்டமைப்புக்கு உள்ளேயே நிறைவு செய்யாவிட்டால் அந்த மக்கள் இயல்பாகவே வெளியக சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்க உரிமையுடையவர்கள்.

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இவற்றைத் தெளிவுபடுத்தியது பிரிவினையைத் தூண்டவல்ல அரசின் கடமையையும் மக்களின் உற்p மையையும் இருதரப்பினருக்கும் தெளிவுபடுத்துவதற்காகவே. இதனை உறுதி செய்யக் கூடிய முறையிலேயே 2003ம் ஆண்டு மாவீரர் உரையில் தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையையும் அவர் குறிப்பிடுகிறார்:-

"தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில்,



வரலாற்று ரீதியாக வாழ்ந்து வரும் பாரம்பரிய மண்ணில், அந்நிய சக்திகளின் ஆதிக்கம், தலையீடின்றி, சுதந்திரமாகக் கௌரவமாக வாழ விரும்புகின்றார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டைப் பேணி,

தொடர்ச்சி 14ம் பக்கம்

# சிங்களக் குடியேற்றங்களால் சின்னாபின்னமாகும் வவுனியா வடக்கு

கோ. ரூபகாந்

வடக்கின் வாசலாகவுள்ள வவுனியா மாவட்டம், தற்போதைய நிலையில் 83சதவீத தமிழர்களையும், 7சதவீத முஸ்லிம்களையும், 10சதவீத சிங்கள மக்களையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் மாவட்டத்தின் குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற செயற்பாடுகளை, ஆட்சிக்கு வருகின்ற ஒவ்வொரு அரசாங்கமும் செவ்வனே செய்து வருகின்றன. போரிற்குப் பின்னரான காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்ட பரந்தளவிலான குடியேற்றங்கள் வவுனியா மாவட்டத்தின் எதிர்கால குடிப்பரம்பலைத் தீர்மானிக்கும் நிலைமையைத் தோற்றுவித்துள்ளமை மறுக்க முடியாத ஒன்றாக உள்ளது. அதனைத் தொடரும் விதமான செயற்பாடுகளை முன்னைய நல்லாட்சி அரசும், தற்போதைய அரசும் மேற்கொண்டு வருகின்றமை தமிழர்களை பொறுத்தவரை ஏமாற்றமேயாகும். வவுனியா நகரின் சில பகுதிகளில் 20 வருடங்களுக்கு முன்னரான காலப் பகுதியில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் கணிசமாக இருக்கும் நிலையில், 2009தொடக்கம் பரந்தளவிலான குடியேற்றங்களால் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பகுதியாக வவுனியா வடக்குக் காணப்படுகின்றது.



### வவுனியா வடக்கும் குடியேற்றமும்

வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில், வவுனியா வடக்கும் ஒன்று. அதன் மையப் பிரதேசமாக நெடுங்கேணி நகர்ப்பகுதி அமைந்துள்ளது. 2009இற்கு முன்னர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த பகுதி, போர் முடிவடைந்த பின்னரான காலப்பகுதியில் பல பௌதிக, சமூக ரீதியான மாற்றங்களை சந்தித்த வண்ணம் இருக்கின்றது. தமிழர்களின் பூர்வீக நிலமான இப்பிரதேசம், இன்று அதன் தனித்துவ தன்மையை இழந்து நிற்கின்றது. காரணம் சிங்கள மக்கள் குடியேற்றங்களே ஆகும். வவுனியா வடக்கின் கிழக்குப் பகுதி முல்லைத்தீவு, திருகோணமலை, அநுராதபுரம் போன்ற பகுதிகளோடு சங்கமிக்கும் அடர்ந்த பெருங்காடுகளை கொண்டமைந்துள்ளது. அதனால் அங்கு குடியேற்றங்களும் மிக இலகுவாக நடைபெற்று விடுகின்றது.

நெடுங்கேணி நகரிலிருந்து கிழக்குப் புறமாக 20 கிலோ மீற்றர் தொலை தூரத்தில் காணப்படுகின்ற அடர்ந்த வனாந்தரப் பகுதியில் பரவலாக குடியேற்றங்கள் செய்யப்பட்டும், இனிமேல் செய்யப்படுவதற்கும் தயாராகி இருக்கும் நிலைமையைக் பார்க்கக்கூடியதாக உள்ளது. மருதோடைக் கிராமத்திலிருந்து நீண்டு செல்கின்ற வீதி, இரு பக்கமும் வானளவு உயர்ந்த மரங்கள் நிறைந்த பெருங்காடாக உள்ளதுடன், மனிதர்கள் வசிப்பதற்கு உரிய நிலை அங்கு இரண்டாம் பட்சமாகவே காணப்படுகின்றது. ஆனால் அப்பகுதியில் பல ஆயிரம் ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டு சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டிருக்கின்றார்கள். 1983ஆம் ஆண்டு குடியேற்றப்பட்ட மக்களும் அப்பகுதியில் வசிப்பதுடன், மகாவலி L வலயத்திற்குள் வருகின்ற நிகவெவ, சபுல்தன்ன போன்ற கிராமங்களில் 2014ஆம் ஆண்டளவில் 200 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.



குறித்த கிராமத்திலிருந்து வெலிஓயா பிரதேசம் 5 கிலோ மீற்றர் தொலைவில் காணப்படுகின்றது. அங்கு குடியேற்றப்பட்ட மக்கள் அநுராதபுரத்தைச் சொந்த இடமாகக் கொண்டுள்ளதுடன், குடியேற்றப்பட்ட பின்னர் பலருக்கு வீடுகள் வழங்கப்பட்டு, வீதிகள் அமைக்கப்பட்டு, வேலி அமைக்கப்பட்டு, சில வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு பிரச்சினை என்னவென்றால், குறித்த கிராமம் உட்பட முல்லைத்தீவு மாவட்டத்தற்குள் வருகின்ற வெலி ஓயா, அதனை அண்டிய பகுதியான சம்பந்நுவர போன்ற பகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்கள் வவுனியா வடக்குப் பிரதேசசபை வாக்காளர்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இம்முறை தேர்தலிலும் அவர்கள் வவுனியா வடக்குப் பிரதேச சபைக்கே தமது வாக்கை அளித்துள்ளனர். ஆனால் அவர்களுடைய பிரதேச செயலக பிரிவாக வெலிஓயா காணப்படுகின்றது. அது முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உரித்தானது. அத்துடன் அவர்களுக்கான வாக்காளர் அட்டை வவுனியா மாவட்டத்திற்குள் வருவதுடன் மின்சார தேவைகளுக்காக அநுராதபுரம் நோக்கியும் செல்கின்றனர். இது நிர்வாக ரீதியாக பல பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றது.

கடந்த உள்ளூராட்சிர் தேர்தல்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில்கூட சிங்கள மக்கள் வசிக்கும் 17கிராமங்கள் இணைக்கப்பட்டு 4 வட்டாரங்களாக்கப்பட்டிருந்தது. அந்த 17கிராமங்களில் அதிகமாக வாக்குகளைக் கொண்ட சிங்கள கிராமமான போகஸ்வெவ உடன் தமிழ் மக்களின் எல்லைக் கிராமங்களான வெடிவைத்தகல், கோவில்புளியங்குளம், ஊஞ்சல்கட்டி போன்றவை இணைந்து ஒரு வட்டாரமாக உருவாக்கப்பட்டது. போகஸ்வெவ கிராமத்தில் 350 வாக்குகள் இருப்பதுடன் குறித்த மூன்று தமிழ்க் கிராமங்களில் 175 வாக்குகளே இருக்கின்றன. இதனால் இம்முறை நடைபெற்ற தேர்தலில் இந்த வட்டாரத்தில் சிங்கள பிரதிநிதி ஒருவரே வெற்றி பெற்றுள்ளார். அவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் கட்சி சார்ந்தவராகவும் இருக்கின்றார்.

அவர் தமிழ்க் கிராமங்களுக்கு சேவை செய்வார் என்பதை எதிர்பார்க்க முடியுமா? அத்துடன் இணைக்கப்பட்டுள்ள இந்த சிங்கள கிராமத்திற்கும் தமிழ்க் கிராமத்திற்கும் இடைப்பட்ட பகுதி 10 கிலோ மீற்றருக்கும் அதிகமான பெரும் காடுகளைக் கொண்டமைந்திருக்கின்றது. இந்நிலையில், இந்த இணைப்பு எவ்வாறு சாத்தியம் என்று எண்ணத் தோன்றுகின்றது. எனவே போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுடைய எல்லைக் கிராமங்கள் அபிவிருத்தியை எதிர்பார்த்து நிற்கையில், அது தொடர்பில் சிந்திக்காமலேயே குறித்த எல்லை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதுடன், இது திட்டமிட்டு செய்யப்பட்ட காரியமாகவே பார்க்கப்படுகின்றது.

### அழிந்து வரும் தமிழர் கிராமங்கள்

போர்ச் சூழல் காரணமாக ஏற்பட்ட அழிவு, இடப்பெயர்வு, போரிற்குப் பின்னர் முறையாக மேற்கொள்ளப்படாத மீள்குடியேற்ற செயற்பாடுகள் காரணமாக வவுனியா வடக்கில் உள்ள எல்லையோரக் கிராமங்கள், மக்கள் இல்லாமல் அழிந்து வரும் நிலையை சந்திக்கின்றன. அதிலும் குறிப்பாக வெடிவைத்தகல், கோவில் புளியங்குளம், ஊஞ்சல்கட்டி போன்றவை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் மண்ணின் மைந்தர்களின் வரவிற்காக ஏங்கி நிற்பதைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. 40இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்த வெடிவைத்தகல் கிராமத்தில் தற்போது ஒரேயொரு முதியவர் மட்டும் வாழ்ந்து வருகின்றார். அதுபோல கோவில்புளியங்குளம் பகுதியில் 6 குடும்பங்கள் வாழ்கின்றன. இப்பகுதியில் உள்ள இரு பாடசாலைகள் புதர் வளர்ந்து மாணவர்களின் வருகைக்காக ஏங்கி நிற்கின்றது. குளங்களும், வயல் நிலங்களும் அதிகம் காணப்பட்டாலும், அவற்றை பயன்படுத்த மக்கள் இல்லை என்பது பெரும் குறையாக உள்ளது. உலகமயமாதல் சூழலில் நகரத்தை நோக்கிய மனிதர்களின் பயணம் கிராமங்களை சோபையிழக்க செய்திருக்கின்றது. எது எப்படியோ போர்ச் சூழல்காரணமாக சோபையிழந்து நிற்கும் கிராமங்களும், மனிதர்கள் நடமாடாத வீதிகளும், பாழடைந்த வீடுகளும், போர் அழிவுகளையும் மக்களின் முன்னைய இருப்பையும் தாங்கி நிற்கின்றன. இவ்வாறான நிலைமை எதிர்காலத்தில் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்படுவதற்கு இலகுவாக அமைந்து விடுகின்றது.

### மகாவலி திட்டம்

மகாவலி திட்டத்தின் மூலமே குறித்த குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு



வருகின்றது. மொரகாகந்த நீர்த்தேக்கத்தில் இருந்து மகாவலி நீரை வவுனியா சேமமடுக் குளத்திற்குக் கொண்டு வருவதற்கான செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. அந்த வகையில் ஆறாயிரம் சிங்களக் குடும்பங்களை மகாவலி திட்டத்தின் மூலம் வெலிஓயா, சம்பத்நுவரவை அண்டிய பகுதிகளில் குடியேற்றுவது என்றும், சம்பத்நுவர பிரதேசத்தை முல்லைத்தீவு போல நகர் சார்ந்த பிரதேசமாக மாற்றி அமைப்பதுடன், நெடுங்கேணி பகுதி கிராம மையமாக இருக்கும் என்றும் மகாவலி அதிகார சபையின் L வலயத்திற்கான கருத்திட்ட வரைபடத்தில் காணப்படுகின்றது.

தொடர்ச்சி அடுத்த பக்கம்

# 13 ஆவது திருத்தமும் சீனாவும் மோடியின் நகர்வின் பின்னணி

கொழும்பிலிருந்து **அகிலன்**

"13 ஆவது திருத்தம்" மீண்டும் பேசுபொருளாகியிருக்கின்றது. எப்போதும் பேசுபொருளாக இது இருக்குமே தவிர, இது ஒருபோதும் தீர்வாகப் போவதில்லை. இதனை சிறிலங்கா அரசாங்கம் ஒருபோதும் நடைமுறைப் படுத்தப்படப் போவதுமில்லை. இதற்கு மேலாகச் சென்று ஒரு தீர்வை வழங்கப்போவதுமில்லை. இதுதான் யதார்த்தமாக இருந்தாலும், சிறிலங்காவும், இந்தியாவும் "தமது தேவைக்கேற்ற" இதனைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கும். ஆனால், ஆகப்போவது எதுவும் இல்லை. இப்போது நடைபெற்றிருப்பதும் அதுதான்.



சிறிலங்காவின் புதிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ புதுடில்லிக்கு மேற்கொண்ட 'கன்னி' விஜயத்தின் போது, 13 குறித்த பேச்சுக்கள் மீண்டும் இடம்பெற்றிருக்கின்றது. '13' ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என பகிரங்கமாகவே கேட்டுக் கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அதற்காக மறைமுகமான அழுத்தங்களைக் கொடுத்தார். ஆனால், அதற்குத் தான் தயாராக வில்லை என்பதை வீறாப்புடன் கூறிவிட்டுத் தான் கோத்தாபய கொழும்பு திரும்பியிருக்கின்றார்.

இரு நாடுகளுக்கும் இடையில் முறுகல் நிலை ஒன்றை இது உருவாக்கியிருக்கின்றதா?

13 ஐ குறித்து இல்லாவிட்டாலும், சீனா தொடர்பில் சிறிலங்காவின் அணுகுமுறை எப்படியிருக்கின்றது என்பதைத்தான் புதுடில்லி உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது.

13 ஆவது திருத்தம் இந்தியாவால் உருவாக்கப்பட்ட ஒன்றாக இருந்தாலும், சிறிலங்கா அரசாங்கம் விரும்பினால் மட்டுமே அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியும். இரு நாடுகளுக்குமிடையில் ஒரு "நெருடலை" எப்போதும் 13 ஆவது திருத்தம் வைத்திருக்கும். இது குறித்துப் பேசுவதை நீண்டகாலமாகவே தவிர்த்துவந்த இந்தியா, இப்போது, அது குறித்துப் பேசியிருப்பது தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு ஒன்று கிடைக்க வேண்டும் என்பதற்காகவல்ல. சிறிலங்கா அரசின் மீது அழுத்தங்களைக் கொடுப்பதற்கான ஒரு ஆயுதமாகவே மோடி இதனைப் பயன்படுத்தினார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தைக் கவிழ்த்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளில் 2015 இல் இந்தியா சம்பந்தப்பட்டிருந்தமை இரகசியமானதல்ல. புதுடில்லி மீது அப்போது மகிந்த பகிரங்கமாகவே குற்றச்சாட்டை முன்வைத்தார். சீனாவுக்கு அதிகளவு முக்கியத்துவத்தை இலங்கையில் மகிந்த கொடுத்தமைதான் அதற்குக் காரணம். இலங்கையில், சீன பலமாகக் காலூன்றுவது தமது நலன்களுக்குப் பாதகமானது என இந்தியா கருதியதால், ஆட்சி மாற்றத்துக்கு உதவியது.

ஆனால், மைத்திரி - ரணில் அரசும் முன்னைய அரசின் பாதையிலேயே சென்றது டில்லிக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. குறிப்பாக சீனா விவகாரத்தில் அதிரடியாக எதனையும் செய்யவில்லை. அதனால் தான் கடந்த நவம்பர் 16இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தலையீடு எதனையும் இந்தியா மேற்கொள்ளவில்லை. அதேவேளையில், ஜனாதிபதியாகத் தெரிவானவுடனேயே டில்லிக்கு கோத்தாபயவை அழைத்தது. அழைப்புக் கடிதத்துடன் இந்திய வெளிவிவகார அமைச்சரே அவசரமாக கொழும்பு வந்தமை கோத்தாவை டில்லிக்கு அழைப்பதில் இந்தியாவுக்கு இருந்த தீவிர அக்கறையை வெளிப்படுத்தியது.

கோத்தா சீனாவுக்கு சார்பான ஒருவராகக் கருதப்படுபவர். அவரது வெற்றியின் பின்னணியில் சீனாவும் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுக நகரம் என்பன ஏற்கனவே சீனாவுக்குக் கொடுக்கப்பட்டு விட்ட நிலையில், கோத்தாபய அதிகாரத்துக்கு வருவது தமது பிராந்திய நலன்களுக்கு ஆபத்தானதாகலாம் என்பதால், ஆரம்பத்திலேயே அவரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது டில்லியின் நோக்கமாக இருந்தது.

டில்லியின் நோக்கம் கோத்தாபயவுக்குப் புரிந்தேயிருந்தது. அதனால்தான், புதுடில்லி புறப்பட முன்னர் இந்திய புலனாய்வுச் செய்தி இணையத்தளம் ஒன்றுக்களித்த நேர்காணலில், சீனா குறித்த இந்தியாவின் அச்சங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் சில கருத்துக்களை அவர் தெரிவித்திருந்தார்.



சீனாவுடனான எமது உறவு பொருளாதார நோக்கங்களைக் கொண்டது.

இந்தியாவின் பாதுகாப்பு நலன்களைப் பாதிக்கும் வகையில் சீனாவுடன் எந்தவிதமான உறவுகளையும் வைத்திருக்கப் போவதில்லை.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 வருட குத்தகைக்குக் கொடுக்கும் ரணில் அரசாங்கத்தின் முடிவுக்கு நான் ஆதரவில்லை. அதனை மீளப்பரிசீலனை செய்வோம்.

இந்த வகையில் கோத்தாபய தெரிவித்த கருத்துக்கள் இந்தியாவைத் திருப்திப்படுத்துவதற்கான முயற்சியாகவே இருந்தது. சீனா தொடர்பாக சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு மட்டுமே கோத்தாபய முற்பட்டாரே தவிர, இன நெருக்கடிக்கான தீர்வு குறித்தோ அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாகவோ எதனையும் சொல்வதற்கு அவர் விரும்பவில்லை. அவரைப் பொறுத்தவரையில், பொருளாதார அபிவிருத்தியின் மூலமாக மட்டுமே இனநெருக்கடிக்கான தீர்வைக் காண முடியும். அதாவது, இங்கிருப்பது ஒரு இனப் பிரச்சினையல்ல. இது ஒரு பொருளாதாரப் பிரச்சினை என்பதுதான் அவருடைய நிலைப்பாடு.

இந்தக் கருத்துடன் டில்லி சென்ற கோத்தாவுக்கு அங்கு அதிர்ச்சிகளே காத்திருந்தது. கோத்தாவை மோடி தனியாகச் சந்தித்த ஹைதராபாத் இல்லம் அவசரம் அவசரமாக புதுப்பிக்கப்பட்டது. இருவரும் தனியாகச் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் பேச்சு நடத்திய அறையின் சுவர்களை அலங்கரித்த ஓவியங்கள் அவசரமாக மாற்றப்பட்டன. வழமையாக ரவிவர்மாவின் இந்தியாவின் பெருமையைக் கூறும் ஓவியங்களே அதிலிருக்கும். ஆனால், கோத்தாபய சென்றபோது இராமாயணத்தில் வரும் சில காட்சிகள் சுவரை அலங்கரித்தன. அனுமன் இலங்கையை எதித்து. இலங்கை மீது போர் தொடுக்கப்பட்டது. சீதையை மீட்டது போன்ற ஓவியங்கள் சுவரை அலங்கரித்தன.

சுவரோவியங்களும் அரசியல் பேசின. அதன் மூலம் கோத்தாபயவுக்கு செய்தி தெளிவான ஒன்று சொல்லப்பட்டது. உளவியல் ரீதியாக தாக்கத்தைக் கொடுப்பதற்காகவே இந்த ஏற்பாடு என புதுடில்லியில் இராஜதந்திரிகள் குறிப்பிட்டார்கள்.

பேச்சுக்களின் பின்னர் கூட்டாக ஊடகவியலாளர்களை இருவரும் சந்தித்தார்கள். அதன் போதுதான், "13 ஆவது திருத்தத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்தும் என்பதை இந்தியா எதிர்பார்க்கின்றது" என நரேந்திர மோடி அறிவித்தார். மோடியைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களிடம் பேசிய கோத்தாபய அதற்குப் பதிலளிக்கவில்லை. பொருளாதார அபிவிருத்தி குறித்து மட்டுமே அவர் அப்போதும் பேசினார்.

ஆனால், அதன் பின்னர் இந்தியாவின் முன்னணி நாளிதழ்களான, இந்து, இந்துஸ்ரான் ரைம்ஸ் ஆகியவற்றுக்களித்த நேர்காணலில், "13 ஆவது திருத்தத்தை சிங்கள மக்கள் ஆதரிக்கவில்லை. அதனால், அதனை நடைமுறைப்படுத்த முடியாது" என கோத்தாபய தெரிவித்தார். போர் முடிவுக்கு வந்திருந்த காலகட்டத்தில் 13 க்கு மேலாகச் சென்று தீர்வைக் காண்பது என்ற நிலைப்பாட்டை மகிந்த ராஜபக்ஷ வெளிப்படுத்தினார். இப்போது 13 ஐ நடைமுறைப்படுத்தக்கூட தான் தயாராகவில்லை என்பதை டில்லியில் வைத்தே கோத்தா அறிவித்துவிட்டார்.

13 ஆவது திருத்தம் இந்தியாவின் குழந்தை என்றாலும் கூட, தமது நலன்களைப் பாதுகாப்பதற்காக அதனை விட்டுக்கொடுக்கவும் டில்லி தயாராகவிருக்கும். சீனாதான் இந்தியாவுக்குப் பிரச்சினையே தவிர, '13' அல்ல. கோத்தா அதனை தெளிவாக உணர்ந்துவிட்டார். சீனாவின் நலன்களைவிட இந்தியாவின் நலன்களை அவர் முன்னிலைப்படுத்தினால், '13' குறித்து மோடி பேசமாட்டார். இப்போது நடந்திருப்பதும் அதுதான். தமிழ்த் தரப்பினரும் இதனைப் புரிந்து கொள்வது அவசியம்!

---

முன்பக்கத் தொடர்ச்சி... சிங்களக் ....

நெடுங்கேணி பகுதி கிராம மையமாக இருக்கும் என்றும் மகாவலி அதிகார சபையின் L வலயத்திற்கான கருத்திட்ட வரைபடத்தில் காணப்படுகின்றது. இது தொடர்பாக வவுனியாவைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ரி.லிங்கநாதன் ஆகியோர் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளனர். வடபகுதிக்கு மகாவலி நீர் வரவேண்டிய தேவை கட்டாயம் இருக்கின்றது. ஆனால் நீர் வந்து சேருவதற்கு முன்னர் சிங்களக் குடியேற்றங்கள் வந்துவிட்டது தான் மெகிப் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படும் பொழுது அந்தந்த மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு அல்லது மாகாணத்தில் உள்ள மக்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். 13ஆம் திருத்தச் சட்டத்திலும் அது தொடர்பாக தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இங்குள்ள மக்களுக்கு காணிகள் தேவைப்படும் நிலையில், அதனைக் கருத்திற் கொள்ளாது வெளிமாகாணங்களை சேர்ந்த மக்களை குடியேற்றுவதானது, அரசின் பேரினவாத மனோபாவத்தை வெளிக்காட்டி நிற்பதுடன், நிலங்களை அபகரித்து விட்டால், தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களை நசுக்கி விடலாம் என்ற கபட நோக்கத்தையும் கொண்டுள்ளது. 2009உடன் ஆயுதப் போர் நிறைவுற்று, அது நில ஆக்கிரமிப்புப் போராக மாறியுள்ளது. அதற்கெதிராக மக்களும், மக்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும் போராடாவிட்டால், எதிர்காலத்தில் வடக்கு மாகாணத்திற்குள் சிங்கள மாவட்டம் ஒன்று இணைந்து கொள்ளும் நிலையை தவிர்க்க முடியாது.

# இந்தியாவிற்கு எதிராக இயங்க வேண்டும் என்று எப்போதுமே விடுதலைப்புலிகள் கூறியது கிடையாது

இனப்பிரச்சினை தொடர்பாகவும், புதிய இலங்கை அரசியல் தொடர்பாகவும், இன்றைய அரசியலில் தமிழர்களின் பங்களிப்பு பற்றியும் பேராசிரியர் ராமு மணிவண்ணன் அவர்கள் இலக்கு இணையத்திற்கு பிரத்தியேகமாக வழங்கிய நேர்காணலின் இரண்டாம் பகுதி, ஈழத்தமிழர் விடுதலையில் பிராந்திய அரசியலின் வகிபாகத்தை விளக்குகிறது



**கேள்வி**

***பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை கொன்று குவித்த கோத்தபயா ராஜபக்ஸவிற்கு இந்தியா செங்கம்பள வரவேற்பு அளித்தது. அது பற்றி உங்கள் கருத்து என்ன?***

**பதில்**

உலக நாடுகளின் கட்டமைப்பில், நாடுகளின் உறவு நிலைகளில் இது பொதுவானது. அண்டை நாடாக இருந்தாலும் சரி, அல்லது ஏனைய நாடுகளாக இருந்தாலும் வரவேற்பு என்று வரும் போது, அந்த அரசிற்கும் மற்றைய அரசிற்கும் இடையிலான உறவாகவே பார்க்கப்படும். இதில் எந்த விதமான உணர்வுகளோ அல்லது மனித நேயமோ மதிப்பீடுகளோ பார்க்கப்படுவதில்லை. ஆனால் பார்க்கப்பட வேண்டும் என்று தான் நாம் நினைக்கின்றோம். அதே போல் இந்திய அரசாங்கம் புவிசார் அரசியல் என்று பார்க்கின்றது. இந்தியப் பெருங்கடலில் சீனாவைக் கட்டுப்படுத்த வேண்டும் என நினைக்கிறது. ஆனால், இவ்வாறு இனப்படு கொலையை நடத்தியவரே அதிபராகும் போது, அவருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கும் போது, ஈழத் தமிழர்களை கூட நினைக்காது விட்டாலும், இந்தியாவில் தமிழ் நாட்டிலுள்ள 8கோடி தமிழர்கள் இந்த வரவேற்பைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்றாவது இந்திய அரசு நினைத்துப் பார்க்கவேண்டும். காங்கிரஸ் அரசாங்கம் செய்த ஒரு சரித்திரப் படுகொலையை தொடர்ந்து இந்த அரசாங்கமும் அதேவழியில் அதன் கொள்கைகளை எடுத்துச்செல்ல வேண்டும் என நினைக்கக்கூடாது.

புவிசார் அரசியலில் சிங்களவர் தமது நாடென்று கூறும் இடத்தில் தமிழர்களின் நிலப் பரப்பும், தமிழர்களின் இறையாண்மையும், தமிழர்களின் நிலஉரிமையும் அங்கு இருக்கின்றது. அதை இந்தியா 70 ஆண்டுகளில் மறுத்து மறைத்து மூடி விட முடியாது. அதனால் இந்திய அரசாங்கம், தங்களுடைய நிலைப்பாட்டையும் இராஜதந்திர மாற்றங்களையும் மேற்கொள்ள வேண்டும் என்று தான் நாம் நினைக்கின்றோம்.

**கேள்வி**

***தமிழ் நாட்டில் 8கோடி தமிழ் மக்கள் இருக்கின்றனர். அவர்களின் உணர்வுகள், முள்ளிவாய்க்கால் படுகொலையை தொடர்ந்த தமிழக சட்டசபை தீர்மானங்கள் இவை எல்லாவற்றையும் மறுத்து, மத்திய அரசு தனது சொந்த மக்களின் உணர்வை மதிக்காது இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கின்றது. இதை எப்படிப் பார்க்கின்றீர்கள்?***

**பதில்**

தமிழக அரசியல் சூழல் தான் இதற்குக் காரணம். அத்துடன் தமிழ் பிரதிநிதிகள் ஒருமித்து எதிர்க்குரல் கொடுக்காதிருப்பது கவலையளிக்கின்றது. ஆனால் இந்தியாவில் உள்ள 120 கோடி மக்களுடன் ஒப்பிடும் போது, தமிழகத்தில் உள்ள 8 கோடி மக்களின் எண்ணங்களால் பெரும் பாதிப்பு நடக்குமா என்று மத்திய அரசு நினைத்திருக்கலாம். இவ்வாறே தான் இந்திய மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்கிடையில் முரண்பாடுகள் அடங்கிய அரசியலை நடத்திக் கொண்டு வருகின்றது. அதற்கான தீர்வு என்ன வென்றால், தமிழகத்தின் அரசியல் பிரதிநிதிகள், மாநில, மத்திய பாராளுமன்ற பிரதிநிதிகள் போல் தமிழ் மக்களின் உணர்வுகளையும், அரசியல் கருத்துக்களையும் தைரியமாக முன்னெடுத்து வெளிப்படுத்தக்கூடிய அரசியல் சக்திகளாக மாற வேண்டும்.

> **“தமிழர்களின் உரிமையும் வளமும் அவர்களின் நிலமும், அதிகாரமும் அவர்களின் கையில் இருந்தால்தான், இந்தியாவிற்கு ஓர் அதிகாரமும் இந்தியாவிற்கென்று ஓர் அரசியல் வீச்சும் இருக்கும்.”**



இலங்கை அரசாங்கத்தில் சிங்களப் பெரும்பான்மை, சிங்கள பேரினவாதம் மற்றும் சிங்கள அரசியல்வாதிகள், இவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து இவர்கள்தான் இலங்கையின் அரசியலைத் தீர்மானிக்கக் கூடியவர்கள் என்று இந்தியா நினைப்பது சரிதான். ஏனெனில், தமிழர்களின் நிலப்பரப்பு சிங்களவர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பின்னர், தமிழர்களுக்கோ அல்லது இஸ்லாமியர்களுக்கோ சிங்கள அரசு பெரிதாக எதையும் வழங்கவில்லை. இதேவேளை தமிழர்களுக்கு தங்களுடைய நிலப்பரப்பு குறித்து தம் நாட்டுக்குள்ளேயோ வெளிநாடுகளிலோ, வேறு எங்குமோ ஆணித்தரமாக போராட முடியாத சூழ்நிலையில் சிங்களவர்களுடன் உறவு பரிமாற்றம் இருந்தால் போதும் என இந்தியா நினைப்பது இயல்பானதே. ஈழத்தமிழர்களை சிறுபான்மையினமாகப் பார்ப்பதும், தமிழ்நாட்டில் 8கோடி மக்கள் தான் பேசுகின்றார்கள் என்று நினைப்பதும் கூட இந்தியாவின் மிக நீண்டகால அரசியலுக்கு உகந்ததாக அமையாது என்பதுடன் இந்திய கொள்கை வகுப்பாளர்கள் குறுகிய பார்வையையே சுட்டி நிற்கிறது. தமிழர்களின் உரிமையும் வளமும் அவர்களின் நிலமும், அதிகாரமும் அவர்களின் கையில் இருந்தால் தான், இந்தியாவிற்கு ஓர் அதிகாரமும் இந்தியாவிற்கென்று ஓர் அரசியல் வீச்சும் இருக்கும். இதை இந்தியா இப்பொழுதாவது புரிந்து கொள்ள வேண்டும்.

பேராசிரியர்
ராமு மணிவண்ணன்

> **இந்தியாவின் பார்வை மாறவேண்டும் என்றால், தமிழர்களுக்கும் ஈழத்தமிழர்கள் பற்றிய ஒரு பார்வையும் மாறவேண்டும்.**

\கடந்த 9 ஆண்டுகளில், அதற்கு முன்பாக 30 ஆண்டுகளில் வடக்கிலும் கிழக்கிலும் இருந்து இந்தியாவிற்கு எதிரான எந்தவொரு நிலைப்பாடும் இருந்தது கிடையாது. அதை இந்தியா இப்போது அலசிப் பார்க்க வேண்டும். இந்த 9 ஆண்டுகளில் மட்டும் ஏன் இப்படி இடைவெளி இருந்தது. அதற்கான காரணம் இந்திய வெளியுறவுக் கொள்கைகளும், தமிழர்களை இந்தியா நடத்திய விதமும் மட்டுமல்லாமல், இலங்கை அரசாங்கத்திற்கு அதாவது ஒரு பேரினவாத அரசாங்கத்திற்கு விடுதலைப் புலிகளுடன் போராடுகின்றோமா? அல்லது விடுதலைப் புலிகள் என்று கூறி, ஒட்டு மொத்த தமிழினத் தையும் அழிக்கின்ற ஒரு சிங்கள அரசிற்கு துணையாகப் போகின்றோமா என்ற இவர்களின் பார்வையில் நிறைய குழப்பங்கள் இருக்கின்றன. இந்த அச்சங்களையும், குழப்பங்களையும் தவிர்த்து, இந்தியா சரியான ஒரு பார்வையை வெளி கொண்டு வரும் வரை இந்தியாவிற்கு அனைத்து நாடுகளினதும் உற வுகள் சரியாக அமையப் போவதில்லை. அது நேபாளத்துடனாயினும் சரி, இலங்கையுடனாயினும் சரி, பங்களாதேஷ் உடன் என் றாலும் சரி இதே நிலை தான்.

ஆனால் பங்களாதேசத்திற்குள் இருந்து 8சதவீத மக்களோ பத்து, பதினைந்து சதவீத மக்களோ, இந்தியா தமக்காக பேச வேண்டும் என்று நினைத்தது இல்லை. நேபாளத்திலும் கூட மிகக் குறுகிய அளவில்தான் பேசப்படுகின்றது. ஆனால் இலங்கையில் தமிழர்களின் காணி, அரசியல் உரிமை மற்றும் இறையாண்மை இவை அனைத்தையும் அடக்கிய ஒரு அரசு சமூகம் இருக்கின்றது. அதை இந்தியா அரசியல் ரீதியாக கையாள கற்றுக்கொள்ள வேண்டும். அதை புவிசார் அரசியலில் ஒரு முன்னெடுப்பை எடுத்து வைக்க வேண்டும். இந்தியாவிற்குத்தான் அதை சிறுபான்மையாக பார்க்கின்ற பார்வை இருக்கின்றது. அதே போல் தமிழர்களுக்கும் அவர்களுக்குள் அவர்களையே சிறுபான்மையாக பார்க்கின்ற பார்வையை விட்டு விலகி, புவிசார் களத்தில் ஒரு புதிய அரசியலை எடுத்து மிகப் பெரிய களமாட முடியும் என்ற ஒரு நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

இந்தியாவின் பார்வை மட்டும் மாற வேண்டும் என்று நான் சொல்லவில்லை. இந்தியாவின் பார்வை மாறவேண்டும் என்றால், தமிழர்களுக்கும் ஈழத்தமிழர்கள் பற்றிய ஒரு பார்வையும் மாறவேண்டும். அவர்களின் நிலப்பரப்பின் அதிகாரத்தையும், புவிசார் அரசியலின் இயக்கங்களையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**தொடரும்.........**

# தமிழ்த் தேசிய நோக்கில், தொல். திருமாவளவன் அவர்களின் ‘அமைப்பாய் திரள்வோம்’ நூல்

சமூகம், அரசியல், நிர்வாகம், மேலாண்மை, குடும்பம் என எல்லாவித செயற்பாடுகளுக்கும், அவை வெற்றிகரமாகவும் கட்டுக் கோப்பாகவும் இயங்கத் தேவையான சில பொதுவான சூத்திரங்களை 'அமைப்பாய்த் திரள்வோம்' புத்தகம் வழியே நம்மால் விளங்கிக் கொள்ள முடியும். அதே வேளை, 'அமைப்பாய்த் திரள்வோம்' புத்தகத்தை தமிழ்த் தேசிய கருத்தியலின் பார்வையில் புரிந்து கொள்ளவும் முடியும்.

தமிழர் தேசத்தின் மக்களுக்கான பாதுகாப்பு, வாழ்வியல் மேம்பாடு, மொழியின் வளர்ச்சி, நிலத்தின் பாதுகாப்பு, தேசத்தினுள் இருக்கும் மக்களின் ஏற்றத் தாழ்வற்ற சமத்துவ வாழ்வு, இவைகள் குறித்த அரசியலையே தமிழ்த் தேசிய அரசியல் என்கின்றோம். இதனை வலிமைப்படுத்தவும், செழுமைப்படுத்தவும், முறைப்படுத்தவும், செயல்படுத்தவுமே 'அமைப்பு' தேவைப்படுகிறது. இன விடுதலை கூறுகள், தனி நாட்டுக்கான போராட்டங்கள், தேசத்தின் அதிகார மையம், மக்கள் திரளின் அதிகாரம் என ஒவ்வொன்றும் காலச்சூழல், தேவை, வரலாற்றின் போக்கு ஆகியவையே தமிழ்த் தேசியத்தின் பாதையை முடிவு செய்கின்றன எனலாம்.

ஏற்றத் தாழ்வுகள் நிரம்பிய இந்தியத் துணைக் கண்டத்தில், தென்னிந்திய முனையில், சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதி இவற்றை முன்னிறுத்தி, அமைப்பாய்த் திரண்ட தமிழ்ச் சமூகம் அதிகாரத்தை நோக்கி முன்னகர்ந்து, ஓரிடத்தில் தேங்கி, சமத்துவமற்ற உள்கட்டமைப்பை உருவாக்கிக் கொண்ட பொழுதே, அண்ணன் திருமாவின் விடுதலைச் சிறுத்தைகள் கிளர்ந்தெழுந்தது. 1920களில் நீதிக் கட்சியும், திராவிட இயக்கங்களும் முன்னிறுத்திய தமிழ்த் தேசிய அரசியலும், 1990களில் இருந்து விடுதலைச் சிறுத்தைகள் முன்னிறுத்தும் அரசியலும் தமிழ்த் தேசியத்தின் பார்வையில் ஒன்றாக இருந்ததை புரிந்துக்கொள்ளல் வேண்டும். தமிழ்த் தேசியத்தின் இருவேறு கூறுகள். மேலே, கூறியதைப் போல காலத்தையும் சூழலையும் பொறுத்து தமிழ்த் தேசியம் பல்வேறு வடிவங்களை பெற்று பயணிக்கும்.

அண்ணன் திருமா, ஒடுக்கப்பட்ட மக்களிடம் இருந்து உருவானாலும்கூட தனி ஒரு பாதையில் நிற்காமல், தொடர்ச்சியாக 'மைய' நீரோட்ட அரசியல், 'ஜனநாயக' அரசியல் என தொடர்ந்து செயலாற்றி வருவதில் இருந்து தான் 'அமைப்பாய்த் திரள்வோம்' நூல் பேசும் மையக் கருத்தையும் உள்வாங்க வேண்டும்.

ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியலை முன்னிறுத்தி இந்தியத் துணைக் கண்டத்தில் அரசியல் களம் கண்டோரெல்லாம் அம்மக்களுக்கான அமைப்பாக மட்டுமே உருவாகி, செயலாற்றி வந்து கொண்டிருந்த வேளையில், அண்ணன் திருமா தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவு, தமிழீழ விடுதலைக்கான ஆதரவு என முன்னின்றதோடு விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பையும் இப் பாதையிலேயே கட்டியமைத்தார் என்பதனையும் நினைவில் கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளின் 'மானுடத்தின் ஒன்று கூடலில்' பங்காற்றிய ஒரே தமிழ் நாட்டின் அரசியல் தலைவர் இவரே. தொடர்ந்தும் தமிழ் பாதுகாப்பு இயக்கம், கருத்துரிமை மாநாடு, மாநில சுயாட்சி மாநாடு, தமிழர் இறையாண்மை மாநாடு, வெல்லும் தமிழ் ஈழம் மாநாடு, தேசம் காப்போம் மாநாடு என அனைத்து ஒன்று திரண்ட கூர்மையான பாதை, தமிழ்த் தேசியமே என்பதனை உணர்வதன் மூலமே, 'அமைப்பாய்த் திரள்வோம்' புத்தகத்தின் மையக் கருத்துக்கள் எந்த அமைப்பை பேசுகிறது, யாருக்கான அங்கீகாரத்தை முன்மொழிகிறது, எதன் அதிகாரத்தைப் பேசுகிறது என்பதனையும் புரிந்து கொள்ள முடியும்.

ஈழத்தின் நவரத்தினம் ஐயா அவர்களின் *"Fall and Rise of Tamil Nation"* புத்தகத்தில் உள்ள சனநாயக விழுமியங்களுக்குள் நின்று நாம் பேசும் எவ்வித தேச அரசியலிலும் உள்ள குறைபாடுகள், இடர்பாடுகள் போன்றவற்றை தெளிவுற விளங்கிக் கொள்ளுதல் மூலம், 'அமைப்பாய்த் திரள்வோம்' நூலில் உள்ள 'நாடாளுமன்ற சனநாயகமும் புரட்சிகர சனநாயகம்' என்ற கட்டுரையினை ஆழமாக புரிந்து கொள்ள முடியும் என கருதுகிறேன்.

**‘அமைப்பாய்த் திரள்வோம்’ புத்தகத்தில், நாடாளுமன்ற சனநாயகமோ, புரட்சிகர சனநாயகமோ, அவற்றின் மீதான உடன்பாட்டின் அடிப்படையில் தான் அரசியல் அமைப்புகள் கட்டமைக்கப்படுகின்றன.**

நவரத்தினம் ஐயாவின் புத்தகமும் முனைவர் தொல். திருமாவின் புத்தகத்தின் இக் கட்டுரையும் பேசும் மையக்கருத்தை ஒப்பிடும் பொழுது, "தேர்தல் சனநாயகமும் புரட்சிகர சனநாயகமும் வெவ்வேறான அமைப்பு முறைகளை கொண்டது. அமைப்பைத் திரட்டுவதிலும் அதிகாரம் நோக்கி மக்களை அணி திரட்டுவதிலும் வெவ்வேறு செயற்பாட்டு வடிவங்களை கொண்டது" என்பதனை உணரலாம்.






முனைவர்* விஜய் அசோகன்

'அமைப்பாய்த் திரள்வோம்' புத்தகத்தில், "நாடாளுமன்ற சனநாயகமோ, புரட்சிகர சனநாயகமோ, அவற்றின் மீதான உடன்பாட்டின் அடிப்படையில் தான் அரசியல் அமைப்புகள் கட்டமைக்கப்படுகின்றன. தேர்தல் கட்சிகளாகவோ அல்லது விடுதலை இயக்கங்களாகவோ அரசியல் அமைப்புகள் உருவாகின்றன. ஆனால், அவ்விரண்டு அமைப்புகளின் குறி அல்லது இலக்கு அரசியல் அதிகாரமேயாகும். வழிமுறைகள் வேறு! இலக்கு ஒன்றே ஆகும்!" என்று தொல் திருமா எடுத்துக் கூறுகிறார்.

**தமிழீழ அரசியல் களத்தினைப் பொறுத்தவரை 2009வரை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தோள் கொடுக்கும் அமைப்பாகவும் 2009ற்கு பின் சர்வதேச வல்லரசுகள் ஏதோ ஒன்றிற்கு சாமரம் வீசும் கைப்பாவையாகவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாறி நிற்பதையும் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.**

இவைகளை படிக்கும் பொழுது, "தேர்தல் ஜனநாயக அமைப்போ, புரட்சிகர அமைப்போ, இவ்விரு பாதையிலும் உள்ளோர் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருக்கவும் முடியும் என்பதையும் உணர முடிகிறது. அதேவேளை, தடையாக இருக்கும் பொழுது இரு அமைப்புகளுமே சிதைவுக்குள்ளாகும் ஆபத்து உள்ளது என்பதனை நாம் தமிழ்த்தேசிய அரசியல் நோக்கில் ஈழம், தமிழ்நாடு இரண்டு தேசங்களிலும் கண்டிருக்கிறோம்" என்ற புரிதலே ஏற்படுகிறது.

இவ்விரு அமைப்புகள் குறித்து மேலதிகமாக எடுத்துக் கூறும் பொழுது, "தேர்தல் சனநாயக அமைப்பு பெரும்பாலான நேரங்களில் வல்லரசியல் கூட்டமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டு, புரட்சிகர சனநாயக அமைப்பினை இல்லாதொழிக்க செயற்படும் நிலையும் உலக நாடெங்கும் காணப்படுவதையும்" 'அமைப்பாய்த் திரள்வோம்' புத்தகம் சுட்டிக் காட்டுகிறது. தமிழீழ அரசியல் களத்தினைப் பொறுத்தவரை 2009வரை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தோள் கொடுக்கும் அமைப்பாகவும் 2009ற்கு பின் சர்வதேச வல்லரசுகள் ஏதோ ஒன்றிற்கு சாமரம் வீசும் கைப்பாவையாகவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாறி நிற்பதையும் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

தேர்தல் சனநாயக அமைப்புகளும், புரட்சிகர அமைப்புகளும் ஒன்று சேர்ந்து நிற்கும் களங்களில், புரட்சிகர அமைப்புகள் பலவற்றில் சரியானவற்றைத் தேர்ந்தெடுப்பது பற்றியும் அதற்குரிய தலைமைகள் அல்லது தலைமையின் கீழ் அணித்திரள வேண்டியதன் அவசியத்தையும் 'போலித் தலைமை, உண்மைத் தலைமை எதுவென பிரித்துணர்ந்து மக்களிடம் எடுத்தியம்பும் கடமையும் நாடாளுமன்ற சனநாயக அமைப்புகளுக்கு உரியவை என்னும் கருத்தை "அமைப்பும் அதிகாரமும்" என்னும் கட்டுரையில் "அமைப்பாய்த் திரள்வோம்" புத்தகம் பேசுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ்நாட்டின் பெரும்பாலான தேர்தல் சனநாயக அரசியல் இயக்கங்கள் எங்ஙனம் ஒன்றாக முன்மொழிந்தார்கள் என்பதனை வரலாற்றுப் பின்னணியிலும் சித்தாந்தப் பின்னணியில் இருந்தும் நாம் உணர மேலே உள்ள கட்டுரை வழிக்காட்டுகிறது எனலாம்.

தமிழ்த் தேசியத்தை இனத்தின் விடுதலை என்ற பொருளில் நாம் கையாளும் பொழுது, இன விடுதலை அரசியல் ஒரு தலை முறையின் பங்களிப்பால் நிறைவடைந்து விடுமா?

"ஒரு தலைமுறையினரிடமிருந்து இன்னொரு தலைமுறைக்கு ஓர் அமைப்பினை ஒப்படைத்தல் என்பது, அவ்வமைப்பின் பெயரையும், கொடியையும், இலச்சினை எங்கிற சின்னத்தையும், கொள்கை அறிக்கை மற்றும் செயல் திட்டங்களையும், அசையும்-அசையாச் சொத்துக்களையும் ஒருவர் இன்னொருவரிடம் ஒப்படைப்பது என்று மட்டுமே பொருளாகாது. வெகுமக்கள் அணி திரண்டு ஓர் அமைப்பாக வடிவம் பெற்று ஒரு பொது நோக்கத்திற்காக இயங்கிக் கொண்டிருக்கிற அதே வேளையில், அடுத்த தலைமுறை யினரும் அதே நோக்கத்திற்காக, அந்த அமைப்பின் வழியாக உள்வாங்கப்பட்டு முந்தைய தலை முறையோடு இணைந்து இயங்குவது" என விரிவாக எடுத்தியம்பி யுள்ளார்.

எந்தவொரு அமைப்பும் வெல்ல வேண்டுமாயின் மக்கள் திரள் அவசியம் என்பதனை வலியுறுத்தும் 'அமைப்பாய்த் திரள்வோம்' புத்தகம், 'தகவல் தொடர்பின்றி மக்கள் தொடர்பில்லை! கொள்கை சார் மக்கள் சக்தியின்றி அமைப்புக்கு வலுவில்லை" எனவும் சுட்டிக்காட்டுகிறது.

எந்தொவொரு அரசியல், இன விடுதலை அமைப்புகளும் தனது நீண்டகால செயற்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்னும் தீரா வேட்கையினின்று பீறிட்டெழுந்த உணர்வுகள், எண்ணங்கள், போராட்டக் களத்தில் கற்றுணர்ந்த படிப்பினைகள் ஆகியவைகள் எவ்வாறு முறைப்படுத்தப்பட்டு, மக்கள் திரளை திரட்டி மக்களுக்கான அரசியல் அமைப்பை கட்டுவதென்பதில் பல்வேறு பார்வைகளின் தொகுப்பே '**அமைப்பாய்த் திரள்வோம்**' புத்தகம்!

# கோத்தபயா – மோடி சந்திப்பின் விளைவே

## இலங்கைத் தமிழர் மீதான குடியுரிமை சட்டத் திருத்தம்

கல்யாணி

இந்திய பா.ஜ.க அரசின் குடியுரிமைச் சட்ட திருத்த மசோதா கடந்த 09ஆம் திகதி இரவு மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவினால் பாராளு மன்ற மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதாவை ஆதரித்து 293 பேரும், எதிர்த்து 82 பேரும் வாக்களித்திருந்தனர். இதனையடுத்து, 11ஆம் திகதி இதே மசோதா லோக்சபாவிலும் நிறைவேற்றப்பட்டது.

இந்தியாவின் குடியுரிமை சட்டத்திருத்த மசோதா என்பது, பொதுவாக வெளிநாடுகளில் இருந்து வந்து இந்தியாவில் குடியேறியவர்கள் இந்தியக் குடிமகனாக முடியாது என்பதால், இவர்களின் விசா காலம் முடிவடைந்ததும் இவர்கள் ஒன்றில் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவார்கள் அல்லது சிறையில் அடைக்கப்படுவார்கள். இந்த செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தவே இந்த குடியுரிமை சட்டத்திருத்த மசோதா இயற்றப்பட்டது.

மேலும் 1956இல் இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்தின்படி, இந்தியாவில் 11 ஆண்டுகளுக்கு மேலாக வசிப்பவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. இந்தச் சட்டத்திலேயே இப்போது திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதற்கமைவாக பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த இந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள், பார்சி இனத்தவர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோருக்கு உரிய ஆவணங்கள் எதுவுமில்லை என்றாலும், இந்தியாவில் 6 ஆண்டுகள் வசித்தாலே அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கலாம் என்பதே அந்தத் சட்டத் திருத்தம் ஆகும்.

மேலும் கடந்த 2014ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன் குடியேறியவர்களுக்கும் இந்தியக் குடியுரிமை வழங்கலாம் என்று மசோதாவில் கூறப்பட்டுள்ளது.

இந்த மசோதாவை தாக்கல் செய்து பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, "இந்தச் சட்டம் சிறுபான்மையினருக்கு எதிரானது அல்ல. அது ஊடுருவல்காரர்களுக்கு எதிரானது. காங்கிரஸ் மதத்தின் பெயரால் நாட்டைப் பிரித்தது. அதனை சரி செய்யவே இந்த சட்ட மசோதா" என்றார். அவர் மேலும் கூறுகையில், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் இந்தியாவின் சட்டத்தின்படி குடியுரிமைக்கு விண்ணப்பித்தால் அதை நாங்கள் கருத்தில் கொள்ளுவோம் என்றும், இந்த நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கு இந்த சட்டத் திருத்தத்தில் இடமில்லை என்றும் தெரிவித்தார்.

இந்த மசோதாவில் ஈழத் தமிழர்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இலங்கையில் சிங்கள–பௌத்த பேரினவாதத்தால் பாதிக்கப்பட்டு, வெளியேறி அகதிகளாக இந்தியாவில் தஞ்சம் புகுந்திருக்கும் இந்துக்களாக அடையாளம் காணப்படும் ஈழத் தமிழர்கள் ஏன் சேர்க்கப்படவில்லை என்ற கேள்வி பலராலும் முன்வைக்கப்பட்டது. அத்துடன் இலங்கையில் பல இன்னல்களை சந்தித்த ஈழத் தமிழர்களை ஏன் இந்தப் பட்டியலில் சேர்க்கவில்லை என்றும் அவர்களின் கேள்வி தொடர்கின்றது.

ஈழத்திலிருந்து யுத்தம் காரணமாகவும், இனவாத பௌத்த சிங்கள அரசின் கெடுபிடிகள் காரணமாகவும் 30 ஆண்டுகளாக இந்தியாவில் வசித்து வரும் ஈழத் தமிழர்கள் பற்றி எந்தவித கவனமும் எடுக்கவில்லை. இந்த மசோதாவை காங்கிரஸ் கட்சி, திமுக உட்பட பல கட்சிகள் எதிர்த்திருந்தனர். பாராளுமன்ற மக்களவையில் நிறைவேற்றப்பட்டு இரண்டு நாட்களின் பின்னரே மாநிலங்கள் அவையில் நிறைவேற்றப்பட்டது. இந்த இரு நாட்களிலும் நாட்டில் பல பகுதிகளிலும் இந்த மசோதா தொடர்பாக கலவரங்கள்



வெடித்துள்ளன. மசோதாவை எதிர்த்து பல அரசியல் சார்ந்தவர்களும், அரசியல் சாராதவர்களும் முழக்கமிட்டனர்.

இருந்த போதும், 11ஆம் திகதி மாநிலங்கள் அவையில் மசோதா நிறைவேற்றப்பட்டது. ஈழத் தமிழ் ஆதரவாளர்கள் ஈழத் தமிழருக்கு இடமளிக்காதது குறித்து பல அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர். மாநிலங்களவையில் மசோதா நிறைவேற்றப்படும் போது, மதிமுக செயலாளர் வைகோ ஆவேசமான உரையை நிகழ்த்தியிருந்தார். ஈழத் தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகி, சகோதரிகள் மானபங்கப்படுத்தப்பட்டனர். ஏதிலிகளாக வந்த அவர்களைப் பற்றி அரசிற்கு அக்கறையில்லை. இரத்தம் தோய்ந்த கையோடு வந்த கோத்தபயாவிற்கு கைகுலுக்கி, கொஞ்சிக் குலாவத் தான் நேரம் இருக்கின்றது.

நீண்ட காலமாக இந்தியாவில் இருக்கின்ற இலங்கைத் தமிழர்கள் குடியுரிமை கோருவதை இந்தச் சட்டம் தடை செய்கின்றது. இப்படியான மசோதாவை வங்கக் கடலில் தூக்கி எறியுங்கள் என்று உரையாற்றினார்.

இந்த மசோதா பற்றி திருமாவளவன் பேசும் போது, இலங்கையில் தமிழர்கள் மீதான தாக்குதலுக்கு அடிப்படை சிங்கள பௌத்த பேரினவாதமே ஆகும் என்பதை நாம் அறிவோம். எனவே இன்றைக்கு தமிழ்நாட்டில் 24 மாவட்டங்களில், 107 முகாம்களில் 59716பேர் 30 ஆண்டுகளுக்கு மேலாக இங்கு இருக்கின்றார்கள். இங்கேயே பிறந்து வளர்ந்தவர்கள்கூட இருக்கின்றார்கள். அவர்களைப் பற்றி நீங்கள் ஏன் மௌனம் சாதிக்கின்றீர்கள் என்றார்.

ஆனால் அதிமுக மசோதாவிற்கு ஆதரவாக வாக்களித்தது. குறித்த கட்சியைச் சேர்ந்த எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் பேசும் போது, தாம் மசோதாவை முழுமையாக ஆதரிப்பதாகவும், ஈழத் தமிழர்களை சேர்க்காதது வருத்தமளிப்பதாகவும் தெரிவித்தார்.

இதுகுறித்து அமித்ஷா விளக்கும் போது, இலங்கையிலிருந்து வரும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண கடந்த காலங்களில் சட்டம் இயற்றப்பட்டது. இப்போது மற்ற மூன்று நாடுகளிலிருந்தும் வருபவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சட்டம் உருவாகின்றது. இலங்கை தமிழர்களுக்கு பாகுபாடு இல்லை. முன்னுரிமை மற்றும் சூழ்நிலையைப் பொறுத்து அவர்களுக்கு இடமளிக்க நாடு சார்ந்த சட்டங்களை நாம் இந்த அவையில் எப்போதும் இயற்றி வந்துள்ளோம் என்று அமித்ஷா தெரிவித்தார்.

இந்த மசோதா குறித்து, ஆன்மீகவாதியான ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர், மத்திய அரசிற்கு தனது கோரிக்கையை முன் வைத்துள்ளார். அவர் தனது ருவிற்றர் பக்கத்தில், மூன்று தசாப்தங்களிற்கும் மேலாக தமிழ் நாட்டில் வாழும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குவது பற்றி மத்திய அரசு சிந்திக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

கவிஞர் வைரமுத்து கூறுகை யில், தங்கள் நிலத்தை இழந்த மனிதர்களாக இலங்கைத் தமிழர்கள் பார்க்கப்பட வேண்டும் என வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இந்த மசோதா குறித்து இந்தியாவில் குடியிருக்கும் புதுக்கோட்டை ஈழத்தமிழர் அகதி முகாமிலுள்ளவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், இந்த குடியுரிமை சீர்திருத்த சட்ட மசோதா தங்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாகத் தெரிவித்துள்ளனர். 1985ஆம் ஆண்டு முதல் இலங்கையிலிருந்து அகதிகள் தமிழகத்திற்கு வந்ததாகவும், தற்போது தமிழகத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இருப்பதாகவும் கூறுகின்றனர். 35 வருடங்கள் இந்தியாவில் அகதிகளாக இருப்பவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்தியா எப்போதுமே புலம்பெயர்ந்து இந்தியாவில் வாழும் ஈழத் தமிழர்களை சந்தேகக்



கண்ணுடனேயே பார்க்கின்றது. யுத்தத்தில் இடம்பெயர்ந்து வந்தவர்கள் என்பதால், அவர்களை விடுதலைப்புலிகள் என்றே சந்தேகப்படுகின்றது. இதனால் தான் விடுதலைப்புலிகளைத் தடை செய்யும் சட்டத்தை இன்னும் நீடித்துக் கொண்டே போகின்றது.

உலக நாடுகளில் சுவிஸ், ஜேர்மனி போன்ற நாடுகள் விடுதலைப்புலிகள் தடைச் சட்டத்தை நீக்கியுள்ள இதேவேளை, இந்தியா மட்டும் காரணமின்றி இந்தச் சட்டத்தை நீடித்து வருகின்றது.

மேலும் போர்க் குற்றவாளியான கோத்தபயாவிற்கு செங்கம்பள வரவேற்பளித்து, மோடி அரசு கொண்டாடியது. சீனாவுடனான இலங்கையின் உறவை முறிப்பதற்காக இந்தியா இலங்கைக்கு நிதியுதவி வழங்கியது. அத்துடன் இதற்காக இந்தியா இலங்கைக்கு எதையும் செய்வதற்குத் தயாராக உள்ளது.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

பகுதி 2

# பாலஸ்தீன தேசிய போராட்டம்

ந.மாலதி

### பாலஸ்தீன விடுதலை இயக்கம்

அரேபிய நாடுகளான சிரியா, லெபனான், ஜோர்டான் மற்றும் ஏனைய வளைகுடா நாடுகளில் வாழ்ந்த புலம்பெயர் பாலஸ்தீன மக்களிடையே ஃபாற்றா (Fatah) என்ற அமைப்பு 1959இல் தோற்றம் பெற்றது. உலகெங்கும் வாழும் பாலஸ்தீனிய மக்களை ஒன்று சேர்த்து பாலஸ்தீன விடுதலைகாக போரை முன்னெடுப்பது அப்போது அதன் நோக்கமாக இருந்தது. பிற்காலத்தில் இதுவே PLO அமைப்பின் முதன்மை பங்காளியானது. PLO எனப்படும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் 1964இல் நிறுவப்பட்டது. 1967ஆறு நாட்கள் போரைத் தொடர்ந்து இது பலமாக இயங்க ஆரம்பித்தது. யசார் அரபத் 1969இலிருந்து 2004இல் அவர் இறக்கும்வரை அதன் தலைவராகத் தொடர்ந்தார். வெவ்வேறு கொள்கைகளைக் கொண்டிருக்கும் பாலஸ்தீன மக்கள் எல்லோரும் இன்றும் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் குறியீடாக யசார் அரபத்தைப் போற்றுகிறார்கள்.

PLO –பக்தாத் இஸ்ரேலின் மீது பல தாக்குதல்களை நடத்தியது. 1974இல் அரேபிய நாடுகளின் கூட்டணி PLOவை பாலஸ்தீன மக்களின் ஏக பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டது. இதைத் தொடர்ந்து ஐ.நா. பொதுச் சபையில் பேசும் முதலாவது நாடற்ற மக்களின் தலைவராக 1982இல் யசார் அரபத் ஐ.நாவில் பேசினார்.

அரேபிய வழக்கில் இன்ரஃபாடா (Intifada) என்பது அடக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் தலைமைத்துவம் இல்லாமல் கிளர்ந்தெழுந்து போராடுவதைக் குறிக்கும். இஸ்ரேல் அடக்கு முறைகளுக்கு எதிராக பாலஸ்தீனர்களின் முதலாவது இன்ரஃபாடா 1987இலிருந்து 1993 வரையான காலப்பகுதி வரை தொடர்ந்தது.

பல வன்முறைப் போராட்டங்களைத் தொடர்ந்து, 1991இல் யசார் அரபத்தும் இஸ்ரேலின் பிரதமர் யிட்சக் ரபீனும் ஒஸ்லோ ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்கள். இதற்காக இருவருக்கும் 1994 இல் சமாதானத்திற்கான நோபல் பரிசும் கிடைத்தது. Gaza வினதும் West Bank இனதும் சில பகுதிகளை நிர்வகிக்க ஒஸ்லோ ஒப்பந்தம் பாலஸ்தீன் தேசிய சபையை (PA) உருவாக்கியது. அது முதலில் PLO வின் ஒரு அமைப்பாக இயங்கியது. காலப் போக்கில் வேறு கட்சிகளும் தேசிய சபை தேர்தலில் இறங்கிய போது, பாலஸ்தீன் தேசிய சபை தனித்து இயங்க, PLO ஃபாற்றா என்ற அதன் முந்தைய பெயரை எடுத்துக் கொண்டது. ஒஸ்லோ ஒப்பந்தம் பாலஸ்தீனத்தின் சில பகுதிகளில் இருந்து இஸ்ரேல் வெளியேறவும் ஒரு கால அட்டவணையை ஏற்றுக் கொண்டது. இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் பலகாலம் நீடிக்கவில்லை. இஸ்ரேலின் தொடரும் அடக்கு முறைகளை ஏற்றுக் கொள்ளாத பாலஸ்தீன மக்கள் மீண்டும் போராடினார்கள். அதுவே இரண்டாவது இன்ரஃபாடா என்று அழைக்கப்படுகின்றது. 2000 ஆண்டிலிருந்து 2005 வரை அது நீடித்தது. அதைத் தொடர்ந்து இஸ்ரேல் Gazaவிலிருந்து வெளியேறியது.




### ஹமாஸ்

Gaza வில் ஃபாற்றாவிற்கு போட்டியாக ஹமாஸ் என்ற பாலஸ்தீன ஆயுத அமைப்பு இப்போது பலம் பெற்றது. 2006 பாலஸ்தீன் தேசிய சபை தேர்தலில் ஹமாஸ் பெரு வெற்றி அடைந்தது சர்வதேசத்திற்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. தொடர்ந்து 2007 – 2017 வரையான காலப் பகுதியில் இந்த இரு பாலஸ்தீன அமைப்புக்களான ஃபாற்றாவும் ஹமாஸும் கடுமையாக மோதிக் கொண்டன. 2017இல் இரு அமைப்புக்களும் ஒன்றாக செயற்படுவதற்கான ஒப்பந்தம் செய்து பாலஸ்தீன தேசிய சபையில் சேர்ந்து இயங்குகின்றன. Gazaவில் ஹமாஸும் West Bankஇல் இல்ஃபாற்றாவும் பலமாக இயங்குகின்றது.

### ஐ.நா

இன்று 6மில்லியன் பாலஸ்தீனியர்கள் உலகின் பல பாகங்களிலும், 4மில்லியன் பாலஸ்தீனியர்கள் பாலஸ்தீனத்திலும் வாழ்கின்றார்கள். அதே நேரம், இன்று உலகின் யூத மக்கள் தொகை ஏறக்குறைய 20மில்லியன்கள். இவர்களில் 6மில்லியன் யூதர்கள் இஸ்ரேலில் வாழ்கின்றார்கள். 12மில்லியன் யூதர்கள் ஐ.அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

1977இலிருந்து ஐ.நாவின் பொதுச் சபை, பாலஸ்தீன பிரதேசங்களை 1948இல் பிரகடனப்படுத்திய நவம்பர் 29ஆம் திகதியை பாலஸ்தீன மக்களுக்கான கூட்டொருமை நாளாக பிரகடனப்படுத்தி அந்நாளை பாலஸ்தீன மக்களின் போராட்டத்தை பிரபலமாக்கும் நாளாக அவதானித்து வருகின்றது. தனது அங்கத்துவ நாடுகளையும் பாலஸ்தீன மக்களின் கூட்டொருமை நாளாக இந்நாளை அவதானிக்க கேட்டு வருகின்றது. இவ்வளவு உலக ஆதரவு இருந்தும் ஐ.அமெரிக்கா, ஐரோப்பிய எதிர்ப்பு இவர்களுக்கு கிடைக்க வேண்டிய நீதியை தடுத்தே வருகின்றது.

2011இல் ஐ.நாவின் முழு உறுப்பினராவதற்கு பாலஸ்தீன் தேசிய சபை விண்ணப்பித்தது. ஆனால் பாலஸ்தீன் தேசிய சபையை பார்வையாளராகவே ஐ.நா பொதுச்சபை ஏற்று வாக்களித்தது. தற்போது இத்தேசிய சபையின் தலைவராக உள்ள முகமத் அபாஸ் வன்முறைகளை எதிர்க்கின்றார். சர்வதேச மட்டத்தில் பாலஸ்தீன தனிநாட்டிற்கான அங்கீகாரம் பெறுவதற்காகவே இவர் உழைக்கின்றார். பயங்கரவாத அமைப்பாக ஐ.அமெரிக்காவால் தடை செய்யப்பட்ட ஹமாஸ் கூட இஸ்ரேல் – பாலஸ்தீன் என்ற இரு நாட்டுத் தீர்வை ஏற்கின்றது. இந்தியா மற்றும் சிறிலங்கா உட்பட உலகின் 140இற்கும் அதிகமான நாடுகள் பாலஸ்தீன தனிநாட்டை அங்கீகரித்து தூதரகங்களையும் வைத்திருக்கின்றன. இஸ்ரேலும் - ஐ.அமெரிக்காவும் தான் தொடர்ந்து இத்தீர்வை எதிர்க்கின்றன. உலகில் இன்று நிலவும் அநீதிக்கு அடிப்படைக் காரணம் எதுவென்று இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

### எமக்கான பாடங்கள்

பாலஸ்தீன தேசிய பிரச்சினையை புரிந்து கொள்வது இன்றைய உலக ஒழுங்கை புரிந்து கொள்வதற்கு மிகவும் உதவும். பாலஸ்தீன தேசிய பிரச்சினையின் செயற்பாட்டாளர்களின் பக்கமும் மேற்குலகம் ஐ.அமெரிக்க-இஸ்ரேல் கூட்டணிக்கு பின்னாலும் நின்று தான் இயங்குகின்றன. இவ்விரு பிரிவுகளுக்கும் இடையில் இயங்கும் ஐ.நாவின் பலவீனத்தைப் பற்றியும் நாம் புரிந்து கொள்ளலாம். சர்வதேச சட்டங்கள் என்று சொல்லப்படுபவை எல்லாம் இங்கு பலமிழந்து போகின்றன. இருந்தும் இதே ஐ.நாவும் மேற்குலகமும் மனித உரிமைகள் பற்றி பேசுவது எத்துணை நகை முரணானது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த உலக ஒழுங்கை மாற்றினால் தான் ஐ.அமெரிக்காவிற்கு இடையூறாக உள்ள தேசிய போராட்டங்களுக்கு நீதி கிடைக்கும். இதை மாற்றுவதற்கு சீனா போன்ற வேறொரு வல்லரசுதான் தேவையா? அல்லது சமூக நீதியை முன்னிறுத்தும் அமைப்புக்களும் போராட்டங்களும் சிந்தனைகளும் உலக மக்களிடையே வளருவது தான் தேவையா என் பதை நாம் சிந்திக்க வேண்டும்.

**முற்றும்.**

---

முன்பக்கத் தொடர்ச்சி... கோத்தபயா....



எனவே கோத்தபயா – மோடி சந்திப்பின் போது, புதிய அரசாங்கத்தில் தமிழர்களுக்கு சலுகைகள் வழங்கவுள்ளதாக கோத்தபயா மோடியிடம் தெரிவித்திருந்தார். பிரச்சினைகள் தீர்ந்து விட்டது. ஈழ அகதிகளை நாட்டிற்கு திருப்பி அனுப்புமாறு கோரியிருந்திருப்பார் அல்லது குடியுரிமை வழங்க வேண்டாம் என்று கூட கூறியிருப்பார் என்ற சந்தேகங்கள் எழுகின்றன.

இதை அடிப்படை நோக்கமாகக் கொண்டே, இப்படியானதொரு திருத்தச் சட்டத்தை மோடி அரசு முன் வைத்திருக்கலாம் என்றே எண்ணத் தோன்றுகின்றது. இதுவரை காலமும் இந்தச் சட்டத்தைப் பற்றிச் சிந்திக்காத மத்திய அரசு, திடீரென இப்போது இப்படியான தொரு சட்டத்தை அமுல்படுத்தவுள்ளது என்பதாலேயே மேற்படி சந்தேகங்கள் எழுகின்றன.

இந்தியாவில் உள்ள ஈழ அகதிகளுக்கு இந்தியா எந்தவொரு சலுகைகளையும் இதுவரை வழங்க வில்லை. அகதி முகாம்களில் இருக்கும் அகதிகள் சொல்லவொண்ணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இதேபோல் வெளியில் இருக்கும் அகதிகளும் இந்திய அரசாங்கத்திடமிருந்து அடிப்படைத் தேவைகளைக்கூட பெறமுடியாதிருக் கின்றனர்.

இதற்குத் தீர்வாக தமிழக அரசியல் சார்ந்தவர்களும், அரசியல் சாராத ஈழ ஆதரவாளர்களும் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என இந்தியாவிலுள்ள ஈழத் தமிழர்கள் விரும்புகின்றனர். இந்த திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படும் பட்சத்தில் இவர்களின் உதவி ஈழத் தமிழருக்குத் தேவையாக இருக்கும் என்பதே அவர்களின் கோரிக்கை.

இச்சட்டத் திருத்தமானது, இலங்கையில் மட்டு மல்ல இந்தியாவிலும் தமிழர்கள் கொடுமையாக நசுக்கப்படப் போகின்றார்கள் என்பதை கட்டியம் கூறி நிற்பதாக கொள்ளலாம்.

# ஆங்கிலேயர்கள் தமிழ் மக்களுக்கு செய்த தவறுகளை ஏற்பதுடன் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்றோம்

## பிரித்தானியா தொழிலாளர் கட்சி

காலனித்துவ காலங்களில் ஆங்கிலேயர்கள் செய்த தவறுகளை தொழிலாளர் கட்சி ஏற்றுக்கொள்கின்றது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நாங்கள் முழுமையாக ஆதரிக்கிறோம். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க ஐ.நா. மூலம் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையை உருவாக்க தொழிலாளர் கட்சி சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயல்படும் என பிரித்தானியாவின் இரு பெரும் அரசியல் கட்சிகளில் ஒன்றான தொழிலாளர் கட்சி இலக்கு இணையம் மற்றும் வார இதழுக்கு வழங்கிய நேர்காணலில் தெரி வித்துள்ளது.

பிரித்தானியாவின் முக்கிய அரசி யல் கட்சிகளுக்கு தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பில் அவர்களின் நிலைப்பாடுகள் குறித்து சில கேள்விகளை முன் வைத்திருந்தோம். அதற்கு தொழிளாளர் கட்சியிடம் இருந்து பதில்கள் கிடைத்துள்ளது. பதில்கள் காலம் தாழ்ந்து வந்தாலும் அதனை நாம் முக்கியத்துவம் கருதி இங்கு பிரசுரிக் கின்றோம். ஏனைய கட்சிகளின் பதில்கள் கிடைத்ததும் அவற்றை பிரசுரிப்போம்.

நேர்காணலின் முழுவடிவம் வருமாறு:

**கேள்வி1.**

**எமது குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஈழத்தில் நடைபெற்ற 2009 ம் ஆண்டு இன அழிப்பு நோக்கிலான (Genocidal War) போரினால் பாதிக்கப்பட்டு மிகவும் நலிவுற்ற மக்களாக (Vulnerable people) கடந்த பத்தாண்டுகளாக வாழ்ந்து கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். இவர்களுடைய மீள்வாழ்வு, மீளமைப்பு தொடர்பாக உங்கள் கட்சிகளின் கொள்கைகள், செயற்பாடுகள் எவ்வாறு இருந்தன? இருக்கின்றன? இருக்கும்?**

**பதில்:**

தொழிலாளர் கட்சி ஆட்சிக்கு வந்தால் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புக்கான நிதியை சர்வதேச மேம்பாட்டுத்துறை மூலம் அதிகரிக்கும். பாதிக்கப்பட்ட மக்களுக்கும் குறிப்பாக பெண்களுக்கும் வேலை வாய்ப்பை உருவாக்க நிலையான தொழில் கள் மற்றும் வணிகங்களை உருவாக்க புலம்பெயர்ந்த தமிழ் மக்களுடன் இணைந்து பணியாற்றுவோம். நம்பிக்கையையும் சிறந்த எதிர்காலத்தையும் வளர்ப்பதற்கு பிரித்தானியா தமிழர்களின் உதவியுடன் வடக்கு மற்றும் கிழக்கில் கல்வித் திட்டங்களை அமைப்பதிலும் கவனம் செலுத்துவோம்.

**கேள்வி2.**

**சர்வதேச முறைமைகளையும் ஒழுங்குகளையும் காணாமல் ஆக்கப்பட்டடோர் குறித்த தகவல்களை வெளியிடுதல், போர்க்குற்ற விசாரணைகள், மனிதாபிமானத்திற்கு எதிரான விசாரணைகள், மனித உரிமை வன்முறைகள் தொடர்பான விசாரணைகளில் பின்பற்றுமாறு அமெரிக்கா, இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அனுசரணையுடன் 2015 இல் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்சில் நிறைவேற்றிய 30/01 தீர்மானத்தைக் தாங்கள் பின்பற்ற முடியாது எனவும் புதிய தீர்மான**



**மொன்றைத் தாங்கள் 2020 இல் முன்மொழியப் போவதாகவும் இலங்கையின் புதிய ஜனாதிபதியும் அமைச்சரவையும் அறிவித்துள்ள நிலையில் அவர்களின் இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்தி 30/1 தீர்மானத்தை முன்னெடுக்க நீங்கள் என்ன வழிகளை கையாளுவீர்கள்?**

**பதில்:**

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க ஐ.நா. மூலம் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறி முறையை உருவாக்க தொழிலாளர் கட்சி சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயல்படும்.

**கேள்வி3.**

**ஆய்வாளர் மத்தியூ கொட்வின் ஐக்கிய இராச்சியத்திலும் கனடாவிலும் தமிழர்கள் வெளிவிவகார அலுவல்களில் ஒரு சக்தியாக உள்ளனர் எனத் தெளிவாகத் தெரிவித்துள்ளார். நீங்களும் தமிழர்கள் உங்கள் கட்சிக்கு எவ்வளவு ஆதரவு தந்து வருகின்றார்கள் என்பதை நன்கு அறிவீர்கள். எனவே நாங்கள் காலனித்துவ ஆட்சி தொடங்கிய காலத்தில் யாழ்ப்பாணம் வன்னி என்கிற முழு அளவிலான இறைமையுள்ள அரசுகளை இலங்கையில் கொண்டிருந்த ஈழத்தமிழர்களைப் பொறுத்த உங்கள் கட்சியின் வெளிவிவகாரக் கொள்கை என்னவென உங்களிடம் அறிய விரும்புகின்றோம்?**

**பதில்:**

இங்கிலாந்தில் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் அளித்த பங்களிப்புகளை தொழிற்கட்சி எப்போதும் அங்கீகரித்து வருகிறது, புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் எப்போதும் தொழிற்கட்சியின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்து வருகின்றனர். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை தொழிலாளர் கட்சி எப்போதும் அங்கீகரித்துள்ளது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை தொழிலாளர் கட்சி அங்கீகரிக்கும். இலங்கையில் உள்ள இன மோதலுக்கு அரசியல் தீர்வுகாண தொழிலாளர் கட்சிநடவடிக்கைமேற்கொள்ளும்.



**கேள்வி 4.**

**பிரித்தானியாவால் தான்,பிரித்தானியாகாலனித்துவ ஆட்சியில், தமிழர்களினதும் சிங்களவர்களினதும் இறைமையுள்ள அரசுகளை ஒரு அரசாக இணைத்தமையால் தமிழர்கள் சிறுபான்மையினராகி அன்று முதல் இன்று வரை பௌத்த சிங்களப் பெரும்பான்மைப் பேரினவாத இன அழிப்பு ஆட்சியை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சி முறைமைக் கூடாக சட்டத்தின் ஆட்சியோ சமத் துவமோ இன்றி அனுபவித்து வருகின் றனர். எனவே நாங்கள் உங்களை தமிழர் பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினையாகப் பார்க்காமல் அனைத் துலக பிரச்சினையாகப் பார்த்துத் தமிழர்கள் இந்த அடக்கு முறையில் இருந்து மீண்டெழ உதவுமாறு பணி வன்பாக வேண்டுகிறோம். நீங்கள் தமிழர்களின் பிரச்சினையைச் சர்வதேசப் பிரச்சினையாகப் பார்ப்பீர்களா?**

**பதில்:**

காலனித்துவ காலங்களில் ஆங்கிலேயர்கள் செய்த தவறுகளை தொழிலாளர் கட்சி ஏற்றுக்கொள்கின்றது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நாங்கள் முழுமையாக ஆதரிக்கிறோம். எங்கள் அறிக்கையில் மற்றும் ஜான் மெக்டோனல் எம்.பி., நிழல் அதிபர் தனது நவம்பர் 21, 2019 நாள் வீடியோ செய்தியில் கூறியது போல், இலங்கையில் இன மோதலுக்கு ஒரு அரசியல் தீர்வைக் காண தொழிலாளர் கட்சி பணியாற்றும், அது இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் சுய உரிமையை அங்கீகரிக்கிறது.

---

### 7ம் பக்கத் தொடர்ச்சி... தேசத்தின் ....

தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன அடையாளத்தைப் பாதுகாத்து, வாழ விரும்புகிறார்கள். தமது தாயக மண்ணில் தம்மைத் தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ விரும்புகிறார்கள். இதுவே எமதுமக்களின் அரசியல் அபிலாசை, உள்ளக சுயநிர்ணயத்தின் அர்த்த பரிமாணம் இதில்தான் அடங்கியிரு க்கிறது" என்பது தேசியத் தலைவரின் கருத்து. தமிழ் மக்களின் பிரதேச சுயாட்சி என்றால் என்ன என்பதை இதில் மிக அழகாக எடுத்துரைத்தார்.

தமிழ் மக்கள் தமது வரலாற்றுத் தாயக மண்ணில் தம்மைத் தாமே ஆளும் தன்னாட்சி அதிகாரத்தை, அதாவது உள்ளக சுயநிர்ணய உரிமையை தேசியத் தலைவர் அவ்வுரையில் வலியுறுத்தி வேண்டினார். ஆயினும் அவர் உள்ளக சுயநிர்ணய உரிமையின் எல்லை வரம்புடன் நின்று விடவில்லை. ஐ.நா பிரகடனத்தில் அரசுக்களின் கடப்பாட்டு விதியாக நெறிக்கப் பட்டிருக்கும், "சம உரிமைகளையும் சுயநிர்ணயத் தையும், பௌத்த சிங்கள பேரினவாதச் சகதிக்குள் புதைந்து கிடக்கும் சிங்கள அரசு தமிழர்களுக்கு வழங்கி விடப்போவதில்லை என்பது அவருக்கு நன்கு தெரியும். ஆகவேதான் அவர் வெளியக சுயநிர்ணய உரிமையைப் பிரகடனம் செய்வது பற்றி ஒரு கண்டிப்பான எச்சரிக்கையை விடுத்தார். எமது மக்களுக்கு சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டு, பிரதேச தன்னாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால், வெளியக சுயநிர்ணய உரிமையைப் பிரகடனம் செய்து பிரிந்து சென்று தனியரசை அமைக்க மக்கள் நிர்ப்பந்தி க்கப் படுவார்கள் என்பதே அவ் எச்சரிக்கை.

இந்த எச்சரிக்கை பிரிவினைக் கோரிக்கை அல்ல. உண்மையை உலகுக்குத் தெளிவுபடுத்திய மொழி. ஆயுதங்கள் மௌனித்துள்ள இன்றைய சூழ்நிலையில் தேசியத் தலைவர் அவர்களதும் தேசத்தின் குரலினதும் இணைந்த இக்கருத்துக்கள் பிரதேச சுயாட்சி மூலமே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை உருவாக்க முடியும் என்பதை இலங்கை அரசாங்கத்திற்கும் உலகுக்கும் மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றன என்பதை ஒவ்வொரு புலம்பெயர் தமிழரும் மீண்டும் மீண்டும் எடுத்துரைத்து சனநாயக வழியில் பாதுகாப்பான அமைதியான வாழ்வை எமது தாயக உடன்பிறப்புக்கள் காண ஒரே அணியில் திரண்டு நின்று உதவுவதே பாலா அண்ணன் என்ற அன்புருவுக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாக அமையும்.

# பலரை ஆட்டிப்படைக்கும் கட்டுக்கடங்கா நினைவு நடத்தை (Obsseeive Compulsive Disorder)

ர. தினேஸ் உளவியல்துறை மாணவன். யாழ்.பல்கலைக்கழகம்

உளப் பிரச்சினைகளில் பதகளிப்பு என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால் பதகளிப்பின் வகைகளில் பலரைப் பாதிக்கும் கட்டுக்கடங்கா நினைவு நடத்தையை ஒரு சிலர் மட்டும் அறிந்திருப்பர். கட்டுக்கடங்கா நினைவு நடத்தையினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணங்கள், செயல்பாடுகளின் தன்மையானது சாதாரணமாக மனிதர்களை அலைக்கழிக்கும் எண்ணங்களிலிருந்து மாறுபட்டது. இந் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையற்றதும், காரணமே இல்லாத வேதனைப்படுத்துவதுமான ஆட்டிப்படைக்கும் எண்ணங்கள் மற்றும் பிம்பங்கள் திரும்பத் திரும்ப அவர்களின் கட்டுப்பாடின்றி வந்துகொண்டே இருக்கும். இந்த எண்ணங்கள் அல்லது பிம்பங்கள் அவர்களுக்கு பாரியளவில் பதற்றத்தையோ, பயத்தினையோ ஏற்படுத்தக் கூடியது. தீங்கு, ஆபத்து, அசுத்தம் சம்பந்தப்பட்ட தவறான அல்லது எதிர்மறையான பதற்றத்தை விளைவிக்கும் எண்ணங்கள் ஏற்படுகின்றது.




இந்த எண்ணங்கள் குறித்த அறிவு பெரும்பாலும் இந் நோய் பீடிக்கப்பட்டவர்களிடம் இருப்பதில்லை. ஏன் இத்தகைய எண்ணங்கள் வருகின்றன? எல்லோருக்கும் இவ்வாறான எண்ணங்கள் தான் இருக்குமா? என்பது கூட அவர்; களுக்குத் தெரியாது. இவ்விதமாக எழும் எண்ணங்களிலிருந்து மீள்வதற்கு எவ்வளவோ முயற்சி செய்தாலும் எளிதில் அதை விட்டு மீள முடியாது. இவ்வகை எண்ணங்கள் ஏற்படுத்தும் பதற்றம், இவர்களைக் கட்டாயமாக சில அவசர நடவடிக்கைகளில் (Compulsions) ஈடுபடத் தூண்டும். இதன்மூலம், தொடர் எண்ணங்களிலிருந்து விடுபடலாம் என எண்ணி இவர்கள் அர்த்தமற்ற செயல்பாடுகள் எனத் தெரிந்தும், அதில் ஈடுபடத் தொடங்கிவிடுவார்கள். உதாரணமாக கையைக் கழுவுவது, அடிக்கடி குளிப்பது, திரும்பத் திரும்ப சவர்க்காரம் இடுவது, ஒரே விடயத்தைத் திரும்பத் திரும்ப செய்வது, இதன் மூலம் தாம் தீங்கு நடப்பதை கட்டுப்படுத்தி விட்டதாகவும், தம்மைச் சுற்றி அனைத்தும் சரியாகவும், பாதுகாப்பாகவும் உள்ளதாகவும் உணர்வார்கள்.

இவ்வாறு செயற்படும் போது எண்ணங்கள் தரும் பதற்றத்திலிருந்து சற்றே விடுதலை கிடைத்தது போல உணர்வார்கள். ஆனால் அது தற்காலிகமான ஒன்றாகவே காணப்படும். மறுபடியும் அவ்வாறான அலைக்கழிக்கும் பதற்றம் நிறைந்த எண்ணங்கள் அவர்களைத் தாக்கும். அதனால் திரும்பத் திரும்ப, கட்டாயத்தின் பெயரில் சில செயல்களில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பார்கள். இவ்வகை எண்ணங்களையும் அல்லது செயல்பாடுகளையும் நிறுத்த நினைத்தாலும், ஏதோ கெட்டது நடந்து விடக்கூடும் என்ற பீதி அல்லது பதற்றத்தினால் அதிலேயே ஆழ்ந்திருப்பார்கள். கட்டுக்கடங்கா நினைவு நடத்தை உள்ள நபர்கள் எப்போதுமே விழிப்பு நிலையில் இருப்பது போன்று இருக்கும். இவர்களால் தளர்வாகவோ, ஓய்வாகவோ இருப்பதாக உணரமுடியாது. இது தீவிரமாகும் போது தினசரி வாழ்க்கையையும், நேரத்தையும், சந்தோசத்தையும் வெகுவாக பாதிக்கிறது.

உலக சுகாதார அமைப்பு கட்டுக்கடங்கா நினைவு நடத்தையில் மிக முக்கியமான அம்சமாகக் காணப்படுவது மீண்டும் மீண்டும் ஒன்றை செய்வதற்கதான மிகைவிருப்ப எண்ணங்கள் அல்லது அலைக்கழிக்கும் செயல்கள் தோன்றுவது என்கிறது.

மிகைவிருப்ப எண்ணங்களாக, நோயாளியின் மனதில் மீண்டும் மீண்டும் நுழையும் கருத்துக்கள், படங்கள், அல்லது தூண்டல் போன்றவை காணப்படுகின்றன. இவை அவர்களை தவறாது தொடர்ந்து அலைக்கழிக்கின்றன. அத்துடன் நோயாளி அடிக்கடி அவற்றை எதிர்த்து நிற்க முயற்சித்து தோல்வியடைகிறார். ஆனாலும் இது அவர்களின் சுய எண்ணமாகவே கருதப்படுகின்றது. ஆயினும் இது அவர்கள் மத்தியில் தானாக நிகழக்கூடியதாகவும் அடிக்கடி முரண்படக் கூடியதாகவும் அமைகின்றது. தற்போது பதகளிப்பு எல்லா சந்தர்ப்பங்களிலும் காணப்படுவதால் கட்டுக்கடங்காத செயற்பாடுகளை தடுக்காதுவிடின் பதகளிப்பு மோசமாகும்.

கட்டுக்கடங்கா நினைவு நடத்தை வேறுபட்ட தன்மைகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. சுத்தம் மற்றும் அழுக்குகள் தொடர்பானது, கட்டுப்பாட்டை இழத்தல், தீங்கை ஏற்படுத்தல், தேவையற்ற பாலியல் சார்ந்த எண்ணங்கள், மதம் சார்பான செயல்கள் மற்றும் கருத்துக்கள், சலவை மற்றும் சுத்தம் தொடர்பான விடயங்கள், தாம் செய்யும் செயல்களை சோதனை செய்தல், திரும்ப திரும்ப செய்யும் செயற்பாடுகள், மனம் சார்ந்தது என தாக்குகிறது.

இன்று பல்வேறுபட்ட காரணிகளால் கட்டுக்கடங்கா நினைவு நடத்தை எனும் பாரிய உள நோய் பலரைத் தாக்குகின்றது. பொதுவாக நம் மூளையின் முன்பகுதி மற்றும் மூளையின் ஆழமான கட்டமைப்புக்கும் இடையே தொடர்பு காணப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இங்கு செரரோனின் நரம்புக்கடத்தியின் குன்றியதன்மை மூளையில் பாதிப்பை ஏற்படுத்துவதால் இப்பகுதி பாதிப்படைந்து இந்நோய் ஏற்படுகின்றது. பரம்பரை ரீதியாகவும் கடத்தப்படக்கூடிய இந் நோய் ஏற்படுவதாக உள மருத்துவர்கள் கூறுகின்றனர் மனஅழுத்தம் கட்டுக்கடங்கா நினைவு நடத்தைக்கான காரணியில்லாவிடினும் மனஅழுத்த நிகழ்வுகள் அதாவது ஒரு விபத்துடன் சம்பந்தப்பட்டோ அல்லது அவ் விபத்துக்கான சாட்சியாகவோ காணப்படல், போன்றவையும் நோய் ஏற்படக் காரணமாக இருக்கக்கூடும். மன அழுத்தம் மற்றும் பதகளிப்பு நோய்களுக்கு நீண்ட காலமாக சிகிச்சையளிக்கப்படாது இருந்தல், வாழ்க்கையில் கட்டுக்கடங்ா நினைவு நடத்தைக்கான அறிகுறிகளை வெளிப்படுத்தலாம். பிள்ளைப்பருவ கசப்பான சம்பவங்கள், பெற்றோரின் தண்டனைகள், பாடசாலை அல்லது வேலை தொடர்பான பிரச்சினைகள், பல்கலைக்கழக பரீட்சை நெருக்கடிகள், மற்றும் அன்றாட வாழ்க்கையில் உறவுகளுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகள் என்பனவும் கட்டுக்கடங்கா நினைவு நடத்தையின் தீவிரத் தன்மையை அதிகரிக்கச் செய்கின்றது.

கட்டுக்கடங்கா நினைவு நடத்தையுடையவர்கள் அழுக்கு அல்லது கிருமி பற்றிய பயம், பிறருக்கு தீங்கு விளைவித்து விடுவோமோ என்கிற பயம், ஏதேனும் தவறு செய்து விடுவோமோ என்கிற பயம், சமூகம் ஏற்றுக்கொள்ள முடியாத விடயத்தில் ஈடுபட்டு தர்மசங்கடம் ஆகிவிடுமோ என்ற பயம், தாங்கள் அசுத்தமாக அல்லது அழுக்காகிவிடுவோமோ என்ற பயம், எல்லாம் தன்னைச் சுற்றி மிகச் சரியாக இருக்க வேண்டுமென்ற தேவை, கடவுள் அல்லது மதம் குறித்த தொடர் எண்ணவோட்டங்கள், வியர்வை, மலம், சிறுநீர் பற்றிய சிந்தனை, அதிஸ்ட்ட மற்றும் துரதிஸ்ட்ட எண்கள் பற்றிய சிந்தனை, பாலியல் வன்முறை அல்லது வக்கிர எண்ணங்களை நினைத்து பயம், தங்களுக்கோ அல்லது உறவினர்களுக்கு தீங்கு வந்துவிடுமோ என்கிற பயம் போன்ற அறிகுறிகளைக் கொண்டிருப்பர்.




பொதுவான செயற்பாட்டு அறிகுறிகளாக கை கழுவுவது, குளிப்பது, பல் துலக்குவது போன்ற தினசரிச் செயல்பாடுகளை செய்யும்போது சில முறைகளை வரிசையாக கடைப்பிடித்தல். உதாரணமாக திரும்பத் திரும்ப கையைக் கழுவுவது, குளிக்கும் போது சில விடயங்களை வரிசைப்படுத்திச் செய்வது, குளியலறையைச் சுத்தப்படுத்தி பிறகே குளிக்க ஆரம்பித்தல். வீட்டுப் பாடம் செய்யும் போது திரும்பத் திரும்ப எழுதி அழித்து, திரும்ப எழுதுவது படிக்கும் போது குறிப்பிட்ட எண்ணிக்கையில் அடிக்கோடிடுவது. வீட்டுப் பாடம் சரியாக செய்துவிட்டோமா என திரும்பத் திரும்ப சரிபார்ப்பது, கதவை சரியாக மூடி விட்டோமா என திரும்பத் திரும்ப சோதித்துப் பார்ப்பது. தூங்கும் முன்னர் குறிப்பிட்ட எண்ணிக்கையில் கட்டில், பக்கத்தில் இருக்கும் பொருள் போன்றவற்றைத் தொட்டுப் பார்ப்பது. பொருட்களைக் குறிப்பிட்ட விதத்தில் சீராக வரிசைப்படுத்துதல், சத்தமாகவோ அல்லது மனதுக்குள்ளோ எண்ணுவது உதாரணமாக சாலையில் வாகனங்களைப் பார்த்தால், அதிலுள்ள எண்களை கட்டாயமாக கூட்டிப் பார்ப்பர். குறிப்பிட்ட வார்த்தைகள், சொற்றொடர்கள் அல்லது பிரார்த்தனையைத் திரும்பத் திரும்ப சொல்வர். தொற்றுநோய்களுக்குப் பயந்து கை குலுக்க மறுப்பது மற்றும் கதவுக் கைப்பிடியைத் தொடாமலிருப்பது, தேவையில்லாத பல பொருட்களை திறக்க மனம் இன்றி சேமித்து வைப்பது உதாரணமாக பழையப் பொருட்கள், பத்திரிகை, பழைய ஆபரணங்கள். திரும்பத் திரும்ப வரும் சில எண்ணங்கள், வார்த்தைகள் அல்லது பிம்பங்கள் பற்றி கட்டாய சிந்தனையால் தூங்க முடியாமலிருப்பர்.

பாரிய உளநோயாக கட்டுக்கடங்கா நினைவு நடத்தை ஏற்படுகின்ற போதும் உள நல மருத்துவரிடம் ஆரம்பத்திலேயே மருத்துவ சிகிச்சை எடுப்பதாலும், உளக்கல்வியூட்டல், அறிகை நடத்தை மாற்றுச் சிகிச்சை வழங்கல், தள்வுப்பயிற்சி, பகுத்தறிவற்ற சிந்தனா நடத்தை சிகிச்சை வழங்கல், சாந்தவழிப் பயிற்சி, குடும்ப உளவளத்துணை, சமூக ஆதாரவை பெற்றுக்கொடுத்தல் மூலம் கட்டுக்கடங்காத நினைவு நடத்தை கட்டுப்படுத்தப்படுகிறது.